# கல்லூரி வளர்ந்த கதை

கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி கீதம்

இராகம் : பிருந்தாவன சாரங்கா　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

வாழ்க யாழ் கல்வியியற் கல்லூரி – என்றும்
சூழ்க நல் ஆசிரியர் கலைக் கல்வி கல்லூரி

அனுபல்லவி

ஆழ்கடலெனக் கல்வி அறிவு தரும் அன்னை
ஏழிசை பாடியே என்றும் துதிப்போம் – நாமே

சரணம்

தெய்வபக்தி தேசபக்தி தெய்வீகக் குருபக்தி
உய்யும் வழி காட்டியே உணர்ந்து வணங்கிடுவோம்
செய்வதெல்லாம் செய்மையுறச் செய்திடவே கற்றிடுவோம்
வையகத்தில் ஆசிரிய வளக் கல்வி நல்கும் அன்னை　　[வாழ்க]

உளவியல் கல்வியில் உயர்ந்த கற்பித்தல் முறை
வளநிறை விஞ்ஞானம் வரை சித்திரம் கணிதம்
அளவிலா நயம் நிறை ஆடலும் பாடலும்
விளையாடல் ஆரம்ப விதிக் கல்வி தரும் அன்னை　　[வாழ்க]

பாங்கான கணனியும் பாலிக்கும் நூலகவியல்
ஆங்கிலம் தொழிற் கல்வி அழகுறத் தரும் அன்னை
நீங்காத பாசத்துடன் நிறைகல்வி நல்கும் மாதா
நாம் காணும் கலைத்தேவி நானிலத்தில் பல்லாண்டு　　[வாழ்க]

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்
பழுத்த செந்தமிழின் பழச்சுவை ஊட்டுவான்
செழித்திடும் ஆசிரியச் சீர்கல்வி தருவான்
வாழ்த்தியே வாழ்த்துவோம் வளமார் கல்லூரி அன்னை　　[வாழ்க]

தாமரை நாயகன் உதித்தே எழுந்தான்
தண்கலை கல்வியின் தாமரை விரித்தான்
நாமகள் வந்துறையும் கோவிலும் சமைத்தான்
நலம்பெறக் கல்வியியற் கல்லூரி வளர்த்தான்　　[வாழ்க]

ஆக்கம்

கலாரத்னா, முத்தமிழ் கலாநிதி, கலாபூஷணம், மஹா வித்துவான்
யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர் எம். ஏ. ஜே. பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0777274513

# கல்லூரி வளர்ந்த கதை

—நினைவுப் பதிவுகள்

## Reflections on the Growth of Jaffna National College of Education

Dr. Thirunavukarasu Kamalanathan M. A., Dip. in. Ed

President Emeritus

Jaffna National College of Education

P. O. Box - 01,

Kopay, Jaffna.

S. JOTHILINGAM

B A (Hons) Po-Sc. M A Po-Sc

Dip in-Int-Af (BCIS). Dip-in-Edu(N I E)

ATTORNEY AT LAW

108/2 Walls Lane. Colombo -15

Tel -011-4619140

Digitized by Noolaham Foundation.

noolaham.org | aavanaham.org


| | | |
|---|---|---|
| நூல் | : | கல்லூரி வளர்ந்த கதை |
| ஆசிரியர் | : | கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் |
| உரிமை | : | ஆக்கியோன் |
| பதிப்பு | : | மார்கழி 2006 |
| வெளியீடு | : | யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியின் ஸ்தாபகரும் தகைசார் பீடாதிபதியுமான கலாநிதி திருநாவுக்கரசு கமலாநாதன் அவர்களின் மணிவிழா அமைப்பு |
| அளவு | : | 1/8 |
| பக்கங்கள் | : | 60 |
| பிரதிகள் | : | 500 |
| பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் (பிரைவெட்) லிமிடெட்<br>இல. 48B, புளூமெண்டால் றோட், கொழும்பு-13.<br>தொ. இல: 2330195 |

| | | |
|---|---|---|
| Title | : | Reflection on the growth of Jaffna National College of Education |
| Author | : | Dr. Thirunavukarasu Kamalanathan |
| Copyright | : | Author |
| Edition | : | December 2006. |
| Published | : | Diamond Jubilee Committee of Dr. Thirunavukarasu Kamalanathan Founder and President Emeritus of Jaffna National College of Education |
| Size | : | 1/8 |
| Pages | : | 60 |
| Copies | : | 500 |
| Printed | : | Unie Arts (Pvt) Ltd.<br>No. 48B, Bloemendhal Road,<br>Colombo -13.<br>Tel: 2330195 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

## கமலநாதனிலிருந்து
## கலாநிதி கமலநாதன் வரை.

**கமலநாதன் பற்றியும்,**
**கல்வியியற் கல்லூரி பற்றியும் சிறுகுறிப்பு.**

திரு. கமலநாதன் தான் எழுதிய இச்சிறு கைந்நூலுக்கு முன்னுரையாக ஒரு குறிப்புரையினைத் தருமாறு வேண்டிக் கொண்டார்.

திரு. கமலநாதன் அவர்கள் அண்மையிலேதான் யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதிப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றுக் கொழும்புக்கு வந்துள்ளார். பீடாதிபதியாக அவர் ஆற்றிய பணிகள் அக்கல்லூரியை யாழ்ப்பாணத்துப் புலமை உலகின் இன்றியமையாத ஒரு நிறுவகமாக்கியுள்ளன. இம் முன்னுரையிலே இரண்டு விடயங்களைக் குறிப்பிடலாம் என்று கருதுகின்றேன். முதலாவது திரு. கமலநாதன் பற்றிய எனது பார்வை இரண்டாவது அவர் மிகுந்த ஸ்தாபித வலுவுடன் நிறுவியுள்ள யாழ்ப்பாணத்தின் உயராசிரிய கலாசாலையின் முக்கியத்துவம் பற்றியதாகும்.

கமலநாதனைப் பல்கலை மாணவ காலத்திலிருந்து எனக்குத் தெரியும். குறிப்பாகப் பேராசிரியர் வித்தியானந்தனின் தம்பிமாரின் மிக நெருங்கிய நண்பரிவர்.

கலாநிதி. கமலநாதன் பணியோய்வு பெற்றுள்ள இவ்வேளையில் எனக்கு அவர்பற்றிய இரண்டு மனப்பதிவுகள் மறக்க முடியாதவையாக உள்ளன. ஒன்று அவரது தனிநிலை முன்னேற்றமாகும்.

அப்பொழுது கமலநாதன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். புவியியல் பாடத்தைக் கற்பித்துவந்தார் என்றே கருதுகின்றேன். அந்த வேளையில் கோப்பாயிலிருந்த ஆசிரியர் கலாசாலையில் அவர் ஒரு விரிவுரையாளராக இணைந்து கொள்ள விரும்பினார். தகுதிவாய்ந்த உயர் வகுப்பு ஆசிரியர்கள் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக இணைந்து பின்னர் சூழமைவு கண்டு அங்கு நிரந்தரப் பதவிபெறும் செல்நெறி பெரிதாகக் காணப்பட்டது.

நான் எந்த காலத்திலும் அதிகாரமுள்ள பதவிகளை வகித்தவனல்லன். ஆயினும் அதிகாரப் பதவிகளிலுள்ளவர்கள் பலர், எனது நண்பர்களாக இருந்தவர்கள், அல்லது நட்புச்சார்ந்த மதிப்பு வைத்திருந்தவர்கள். அப்பொழுது அந்த ஆசிரிய கலாசாலையின் அதிபராக இருந்தவர் எனக்கு வேண்டியவர். கமலநாதனோ தான் எடுத்தகாரியத்தின் வெற்றிக்காக உழைப்பவர். தனது பல்வேறு தொடர்பாளர்களுள் ஒருவராக என்னையும் கொண்டு என்னிடத்தும் அது பற்றிப் பேசினார். கமலநாதனின் புலமையூக்கம் பற்றி விதந்துரைப்பதில் என் மனச்சாட்சிக்கு எவ்வித தடங்கலும் இருக்கவில்லை. சில வருடங்களின் பின்னர் அவர் அங்கு மாணவக் கவர்ச்சியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளர்களுள் ஒருவராக விளங்குவது பற்றி அறிந்தேன். நிறைந்த மனத்திருப்தி ஏற்பட்டது.

இவற்றை அடுத்து புதிதாக நிறுவப்படப்போகும் கல்வியற்கல்லூரிக்கு இவரை பீடாதிபதியாக்கப் போகிறார்கள் என்றறிந்தேன். உண்மையில் அது ஒரு பொருத்தமான முடிவாகும். அப்பதவிக்கான தரிசனநோக்கும் அடையிலக்குத் தெளிவும் கமலநாதனிடம் இருந்தது. யாழ் பல்கலைக்கழகத்திலே நான் அறிந்தவகையில் கலைப்பீடத்திலே அவரது உறவு போற்றப்பட்டதொன்றாகும். பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் தொடங்கு நிலையில் உள்ள கல்லூரிக்குச் சென்று புலமை ஆலோசனைகள் வழங்கி வந்தனர். பல்கலைக்கழக ஆசிரியர்களுடன் புழக்கநிலை உறவு வைத்திருப்பது ஆசிரிய மாணவர்க்கும் நிறைந்த ஆர்வத்தை ஏற்படுத்தியது. கமலநாதனின் கல்வியற் கல்லூரிச் சாதனைகள் 3 என நான் கருதுகின்றேன். முதலாவது அக்கல்லூரிக்கு வேண்டிய பௌதிக வளங்களையும் (பிரதானமாகக் கட்டடங்கள்) புலமை வளங்களையும் பெற்றுக்கொடுத்தமையாகும். இரண்டாவது அந்த கல்லூரியின் புலமை நிலை ஒழுங்கமைப்பினை மிகச் சிறப்புடன் ஒழுங்கமைத்துக் கொண்டமையாகும். அவருடைய நிருவாகத் திறனுக்குள்ளே இலக்குப் பற்றிய தெளிவும் அதனை ஈட்டும் செயற்றிறனும் நன்கு தெரிந்தது. இரண்டொரு வருடங்களுக்குள்ளேயே ஒரு பத்து பதினைந்து வருட அனுபவம் பெற்ற நிறுவனம் போல அது இயங்கி வந்தது. இதற்குள் ஒரு கெடுபிடியும் இருந்ததுண்மைதான்.

மூன்றாவது அந்நிறுவனத்தைத் தான் தலைமைதாங்கி நடத்துவதற்கு வேண்டிய தனது ஆள்நிலைத் தகைமையை வளர்த்துக் கொண்டமையாகும். அதாவது கமலநாதன் திறமையான நிர்வாகியா மாத்திரம் இருக்கவில்லை அவர் சந்தேகங்களுக்கு அப்பாலான கல்விப்புல புலமையாளனாகவும் விளங்கினார். அந்தப் புலமைப் பூரணத்துவத்தை அவர்து கலாநிதிப் பட்டம் காட்டுகின்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் கல்லூரியில் தான் வளர்ந்து, தான் கல்லூரியை வளர்த்து அதன் சிறப்புக்கான சுட்டியாகவும் விளங்கினார். இது ஒரு பெரிய சாதனை, இந்தச் சாதனையினை அவர் ஈட்டிய முறைமையிலே சிலரது அதிருப்தியைக் கூடப் பெற்றிருக்கலாம். ஆனால் இன்று பின்னோக்கிப் பார்க்கின்றபொழுது கமலநாதன் இல்லாதிருந்தால் அக்கல்லூரி இன்றுள்ள வளச்செழுமையைப் பெற்றிருக்க முடியாது.

கமலநாதனை நான் மதிப்பதற்கான மற்றய காரணம் அவர் காலஞ்சென்ற பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவு நிதியத்தின் ஒழுங்கமைப்பாளராகச் செயற்பட்ட முறைமையாகும். பேராசிரியர் வித்தியானந்தன் நினைவாக பாடசாலைநிலைகளிலே நாடகப்போட்டிகள் நடத்தப்படுகின்றன. வருடாந்த நினைவுரைகள் நடத்தப்படுகின்றன. காலஞ்சென்ற பேராசிரியர். நந்தி அதற்கான முதல் உரையை நிகழ்தினார். வித்தியானந்தனை நகமும் சதையுமாக காட்டுகிற ஓர் அற்புதமான உரையது.

பேராசிரியர் வித்தியானந்தனுக்கு யாழ் பல்கலைக்கழக வளவினுள் அவர் பெயரால் வழங்கும் பிரதான நூலகமுன்றிலிற் சிலையொன்றினை நிறுவ எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட முயற்சி நிறைவேறாது போனமை மனவருத்தத்துக்குரியது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தனது முதலாவது துணைவேந்தரை உரிய முறையில் என்றாவது ஒருநாள் கௌரவிக்கும், அந்த வேளையில் கமலநாதனும் வித்தியானந்தன் நினைவுக்குழுவினரும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் நிச்சயம் பலிதமாகும்.

இவ்வாறு நோக்கும்பொழுது கமலநாதனின் (தற்காலிக) தோல்விகூட அவருடைய ஆளுமைக்கான வெற்றியாகிறது. கமலநாதனுக்கு எனது வாழ்த்துக்கள். கமலநாதனின் இந்தப்பணியை அவரது மாணவர்கள் உரியமுறையிலே போற்ற வேண்டும்.

இது பற்றிச் சிந்திக்கும் பொழுதுதான் இந்தக் கல்வியற் கல்லூரி கிளப்பும் சில சிந்தனைகள் முக்கியமாகின்றன. யாழ்ப்பாணத்துக்குப் பல்கலைக்கழகம் வருவதற்கு முன்னர், யாழ்ப்பாணத்தின் மேற்கல்வி நிலையில் முக்கியம் பெற்றிருந்த நிறுவனங்கள் ஆசிரியர் கலாசாலைகளாகும். யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கிலவழி உயர்க்கல்விக்கு இடம்கொடுத்ததெனினும் தமிழ்ப் பயில்வினைப் பொறுத்தவரையில் ஆசிரிய கலாசாலைகளே முக்கியமான நிறுவகங்களாக விளங்கின. ந. மகாலிங்கசிவம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதர் கிருஷ்ணபிள்ளை, பண்டிதர் சச்சிதானந்தன் ஆகியோர் ஆசிரிய கலாசாலைகளோடு தொடர்புடையவர்களே. பண்டிதர் க.பொ. இரத்தினம் மஹரகம ஆசிரியர் கலாசாலையில் பயிற்றுவித்தவர். மகாலிங்கசிவம், பண்டிதர் கிருஷ்ணபிள்ளை, பண்டிதர் கணபதிப்பிள்ளை ஆகியோர் பாடசாலைத் தமிழ்க்கல்வியின் தமிழ் கற்பித்தல் முறைமையினை நிர்ணயித்தவர்கள் என்று கூறலாம்.

இவர்கள் ஒருபுறமாக, இன்னொரு புறத்தில் ஆசிரியர் கலாசாலையின் அதிபர்கள் உப அதிபர்கள், முக்கியமான புலமைச் செல்வாக்குச் சக்திகளாக விளங்குகின்றனர். எஸ். கே. ராஜசிங்கம், சுவாமிநாதன், அ. பொன்னையா போன்றார் மிக முக்கியமானவர்கள்.

யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் இலங்கையின் எல்லா பாகங்களிலும் கற்பித்தலை மேற்கொண்டிருந்த காலத்தில் அவர்கள் பற்றிய பல எதிர்ப்புக்களுக்கிடையேயும் நல்லாசிரியர்களாகப் போற்றப்பட்டதற்குக் காரணம் கோப்பாய், திருநெல்வேலி, கொழும்புத்துறை போன்ற ஆசிரிய கலாசாலைகளிலே பெற்றிருந்த பயிற்சியேயாகும். பலாலியின் ஆசிரிய கலாசாலை ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய துறைகளிலே சிறப்புப் பயிற்சி நடத்தத் தொடங்கியபொழுது அவ் ஆசிரிய கலாசாலையின் செல்வாக்கு மிகப்பெரிதாக வளரத் தொடங்கிற்று. பெண்கள் பயின்ற ஆசிரிய கலாசாலைகளிலும் புலமைச்சிறப்புடைய விரிவுரையாளர்கள் பலர் கடமையாற்றினர்.

பாடசாலைநிலை ஆசிரியர்கள் இலங்கை போன்ற நாடுகளிலே பெறும் முக்கியத்துவத்தினை நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும். கிராமச்சூழலில் "உபாத்தியார்", "இஸ் கூல் மாத்தயா" மிக முக்கியத்துவம் பெற்ற சமூக முதல்நிலையாளர்களாக விளங்கி வந்தனர். இந்த வட்டம் விரிவடைந்து பயிற்றப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் முக்கியவிடம் பெறத் தொடங்கியதும், ஆசிரிய கலாசாலைகள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றன. சாதிப்பிரச்சினை வரலாற்றில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தாழ்த்தப்பட்டோர்களுக்கு சம இடம் கொடுக்க மறுக்கப்பட்டபொழுதே யாழ்ப்பாணத்தின் சாதிப்பாகுபாட்டுணர்வு இலங்கை நிலைப்பட்ட பிரச்சினையாகப் பேசப்பட்டது. 1920களில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் மாணவர் விடுதியில் ஏற்பட்ட பிரச்சினை அக்காலத்தில் கல்வித்துறைப் பொறுப்பாளராக இருந்த பணிப்பாளரால் (அப்பொழுது இலங்கை முழுவதற்கும் ஒரே ஒரு கல்விப்பணிப்பாளரே இருந்தார்) மிகுந்த கண்டிப்புடன், சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற அடிப்படையில் தீர்க்கப்பட்டது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கல்வி முறைமையின் மேற்கூறிய சனநாயகமயப்பாடு நிலைநிறுத்தப்பட்டது.

மேற்கூறிய அம்சங்கள் யாவுமே யாழ்ப்பாணத்தின் சமூக வளர்ச்சியிலும், சமூக சமத்துவ வளர்ச்சியிலும் மிக முக்கியமாகின்றன. இலங்கைத்தமிழர் சிந்தனை வளர்ச்சியில் ஆசிரிய கலாசாலைகள் வகித்து வந்த இடத்தினை மீளவலியுறுத்த வேண்டிய தேவை இன்றுள்ளது.

இப்பொழுது கல்வியியற் கல்லூரிகள் என நிறுவப்பட்டுள்ளவை ஆசிரிய பயிற்சித்துறையின் உயர்மட்டமாக உள்ளன. இந்த மட்டத்துக்கு மேலேயுள்ளது பல்கலைக்கழகங்களில் நடத்தப்பெறும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவாகும். ஆனால், அந்த நிலையில் ஏற்கனவே ஆசிரியர்களாக உள்ளநிலையில் உள்ளவர்களே பயிற்சி பெறுவர்.

கல்வியியற் கல்லூரிகளைவிடச் சில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் உள்ளன. அவை அந்நிலையில் பெரும்பாலும் ஏற்கனவே ஆசிரிய நியமனங்கள் பெற்றவர்களே பயிற்றப்படுவதாக அறிகிறோம். இப்படிப்பார்க்கும் பொழுது ஆசிரிய மாணவர்களாகச் சேர்ந்து ஆசிரியப்பயிற்சிபெறும் தொழில்நிலை பயிற்சி நிறுவனமாக விளங்குவது கல்வியியற் கல்லூரிகளே. அதாவது மருத்துவக் கல்லூரி, பொறியியற் பீடம் ஆகியவற்றில் நடைபெறுவது போன்று இங்கு தொழில்நிலைப் பயிற்சி–தொழின்மைப் பயிற்சி (Professional training) நடைபெறுகின்றது. அதாவது ஆசிரியத் தொழிலைத் தமது வாழ்வுப்பணியாக விரும்புகிறவர்களுக்கான தளமாக இது அமைகின்றது.

காலனித்துவ அமைப்பில் ஆசிரியர் பதவி பொதுவிலேயும் சுதேச மொழி ஆசிரியர் பதவி சிறப்பாகவும் ஒரு வகைப்புறக்கணிப்புக்கு ஆளாகிற்று. ஆனால் "உதவி பெறும்" பாடசாலை முறை இருக்கும்வரை அத்தகைய பாடசாலைகளிலே கற்பித்த ஆசிரியர்களுக்கு மக்கட் பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கான ஓரிடம் இருந்தது. சமூக முற்போக்குச் சிந்தனைகள் இத்தகைய ஆசிரியர்கள் மூலமாகவே வந்தன. ஆனால் அரசினர் சேவையிலிருந்த ஆசிரியர்களைப் பொறுத்தவரை இத்தகைய வாய்ப்புக்கள் இருக்கவில்லை. இப்பொழுதோ கல்விச்சேவை முழுவதுமே அரசினர் நிலைப்பட்டதாக இருக்கும் பொழுது ஆசிரியத் தொழிலை மேற்கொள்ளும் இளைஞர்கள், யுவதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைவிருத்தியும் முக்கியத்துவமும் எவ்வாறு மேல்நிலைப்படுத்தப்படப் போகின்றன என்பது ஒரு முக்கிய பிரச்சினையாகும். ஆசிரியர்களின் வேதனங்களில் உயர்ச்சி ஏற்பட்டதன் பின்னர் இந்தப் பிரச்சினை மேலும் முக்கியத்துவமடைகின்றது. ஆசிரியத் தொழின்மை பற்றி இன்னுமொரு முக்கியமான விடயமுண்டு. அது கற்பித்தல் பற்றிய ஆராய்ச்சிகளாகும். இலங்கையின் பல்கலைக்கழகங்களிலுள்ள கல்வித்துறைகளில் மிகச்சிலவே இவ்விடயத்தில் ஆர்வங்காட்டியுள்ளன.

தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வியமைச்சின் பாடநூற்பிரிவு என பல நிலைகளில் கற்பித்தல் விடயங்கள் பற்றிய ஆய்வுச்சிரத்தை உண்டெனினும், வரன்முறையான அநுபவநிலைப்பட்ட ஆராய்ச்சிகள் குறிப்பாக தமிழ்மொழிக் கல்வி பயிற்றலிலே மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. உதாரணத்துக்கு தமிழ் மொழிபயிற்றல் பற்றிய பிரச்சினைகளையே முன்னிலைபடுத்திக் கூறலாம். தமிழ் பயிற்றல் பற்றிய விரிவான கொள்கை நிலைபட்ட கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதிலும் பார்க்க உத்தேச மாதிரிகளையே வழிகாட்டிகளாக பயன்படுத்தும் போக்கினைக் காணலாம். தேசிய கல்வி நிறுவகம் வெளியிட்டுள்ள இடைநிலைத்தமிழ் நூல்கள் இலக்கணங்கற்பித்தலைக் கையாண்டுள்ள முறைமையை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இவ்விடயத்திலே கல்வியியற் கல்லூரிகள் எத்தகைய இடத்தை வகிக்கப் போகின்றன என்பதுபற்றி இக்கட்டுரை ஆசிரியருக்கு எதுவும் தெரியாது. ஆனால் கல்வியியற் கல்லூரிகளுக்கு இது தொடர்பான நிச்சயமான தொடர்புண்டு.

நாடகமும், அரங்கியலும் பாடத்தினைச் சிறப்புப் பயிற்சி துறையாக கொண்டுள்ள தமிழ், சிங்கள, கல்லூரிகளுள்ளே அக்கல்வி முறை பற்றிய உன்னிப்பான சிந்தனையுண்டு என்பதை அறிவேன்.

இவ்விடயத்தில் பல்கலைக்கழகக் கல்விப்புலமையாளருக்கும் கல்வியியற் கல்லூரிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். அதிகாரப் பிரச்சினைகளுக்கு இடங்கொடாத வகையிலே பரஸ்பர ஊடாட்டத்துக்கான வாய்ப்புக்கள் பற்றி சிந்தித்தல் வேண்டும்.

இந்த விடயத்திலே கமலநாதன் பீடாதிபதியாக இருந்த பொழுது சில முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை மனத்திருப்தியை ஏற்படுத்துகின்றது.

கல்வியியற் கல்லூரிகளின் புலமைத்தளம் இன்னும் சரியாக தீர்மானிக்கப்பட வில்லை. இந்நிலை அனைத்திலங்கை நிலையில் விரைவிலே தீர்க்கப்படும் என்று எதிர்பார்ப்போமாக.

**5.12.2006**
கொழும்பு

*தகைசார் வாழ்நாட் பேராசிரியர். கா. சிவத்தம்பி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



உதவி நன்கொடை பெற்று இயங்கிவந்த ஆசிரியர் கலாசாலைகளையும், பாடசாலைகளையும் அரசாங்கம் கையேற்றமையைத் தொடர்ந்து (1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர்) இலங்கையின் கல்வியில் ஏற்படுத்தப்பட்ட தீவிர மத்திய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும், மத்தியநிலையில் ஏற்படுத்தப்பட்ட அதிகாரக் குவிப்பும் பிரதேச நிலைகளிலும், இனத்துவ நிலைகளிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தின. கொழும்புத்துறை, நல்லூர், திருநெல்வேலி ஆகியவற்றில் இயங்கி வந்த ஆசிரியர் கலாசாலைகள் மூடப்பட்டமையால் ஆசிரிய வாண்மைக்கல்வியில் ஏற்பட்ட தாக்கங்கள் பாடசாலைகளின் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளில் தொடர்நிலையான பின்னடைவுகளை ஏற்படுத்தலாயின.

வளமானதும், வினைத்திறன் மிக்கதுமான ஆசிரிய வாண்மைக் கல்வியின் தேவையும், முக்கியத்துவமும் கல்வியியலாளரால் அவ்வப்போது வலியுறுத்தப்பட்டு வந்தாலும், நடை முறை வடிவங்கள் எட்டப்படாதிருந்தன. இதே வேளை உலகளாவிய முறையில் ஆசிரிய வாண்மைக் கல்வியில் பல்வேறு புத்தாக்கங்களும், புதுவிசைகளும் உட்படுத்தப்பட்டு மாற்றங்கள் மேலுயர்த்தப்பட்டன.

இலங்கை உள்வாங்கிக் கொண்ட கோளமயமாக்கல் எமது கல்விச் செயற்பாடுகளைப் பலகோணங்களிலே தாக்கின. மாறிவரும் உலக விசைகளுக்கு ஏற்றவாறு ஆசிரிய வாண்மைக் கல்வியை மறுசீரமைக்கும் நடவடிக்கையாக தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆக்கம் பெற்றன. ஆனால் நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட வடபுலத்துக்கு தேசிய கல்வியியற் கல்லூரி கிடைக்கப் பெறவில்லை. தேவை வேண்டி எழுப்பப்பட்ட குரல்களும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் நிராகரிப்புக்கு உள்ளாகின.

நிறைவேற்றிவைக்கப்படாத ஓர் ஆசிரியவாண்மைக் கல்வித் தேவையை தனிச் சுமையேற்று நிறுவி வைத்தவர் அன்புக்குரிய எனது மாணவர் கலாநிதி திருநாவுக்கரசு. கமலநாதன் அவர்கள். அயராது, தளராது எதிர் விசைகளுக்கு முகம் கொடுத்தும், எதிர் விசைகளை நேர்விசைகளாக்கியும் யாழ்மண்ணில் தேசிய கல்வியியற் கல்லூரியை மலரச் செய்த இவரது கல்விப் பணிகள் தனித்து ஆராயத்தக்கவை.

கல்விக்குரிய கவிநிலையை உருவாக்கும் கட்டமைப்புக்களும் முருகியல் ஒழுக்கமும் புனிதமான பராமரிப்பும், ஏனைய உயர் கல்வி நிறுவனங்களிலும் செல்வாக்கு விளைவிக்கப்படக் கூடிய அழகியல் விசைகளாக இவரால் உருவாக்கம் பெற்றன.

ஆசிரிய மாணவரிடத்தும் விரிவுரையாளர்களிடத்தும் காணப்பட்ட "புலமைச் சோர்வு" அல்லது "அறிகைச்சோம்பேறித்தனம்" (Cognitive lethrgy) என்ற தோற்றப்பாட்டை ஒழிப்பதற்கு இவர் முயற்சிகளை மேற்கொண்ட வேளை எழுந்த எதிர்புக்கள் கல்விச் சமூகத்தின் கவனிப்புக்குரியவை. பாடசாலைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களிலும் இந்தத் தோற்றப் பாட்டினை ஒழிக்கும் பொழுது தான், கல்வித்தர மேம்பாட்டினை எட்ட முடியும். வேகமாகப் பரவிக் கொண்டிருக்கும் அறிகைச் சோம்பலுக்கு உள்ளானவர்களிடம் கருத்து நிலையில் நேரடியாக மோதியவர் கலாநிதி திருநாவுக்கரசு. கமலநாதன்.

அறிவு முகாமைத்துவம், அறிவுக் கையளிப்பு, வினைத்திறன் மிக்க **ஆசிரியத்துவ ஆற்றுகை நிலை** (Performativity) முதலியவற்றை மேம்படுத்துவதற் குரிய செழுமையான கலைத்திட்டச் செயற்பாடுகளையும் இணைந்த கலைத்திட்டச் செயற்பாடுகளையும் வளமாக வடிவமைத்து வழங்கியமை இவரது கலாநிதிப்பட்டத்து ஆய்வின் செயல்முறை வெளிப்பாடுகளாக அமைந்தன.

கல்விவளர்ச்சிக்குரிய அடிப்படையான செயற்பாடுகளுள் ஒன்றாக விளங்குவது **கருத்துவினைப்பாடு** (Discourse). இச் செயற்பாட்டினை ஆசிரிய மாணவரிடத்தும் விரிவுரையாளர்களிடத்தும், வளர்த்தெடுப்பதற்குரிய நூலகம், இணையம், அரங்குகள், செயலமர்வுகள், முதலிய வற்றினூடாக மேற் கொள்ளப்பட்ட ஆளுமைக்கட்டமைப்பாக்க நடவடிக்கைகள் கல்வியியலாளரின் கவன ஈர்ப்பைப் பெற்றன.

ஆசிரிய ஒழுக்கம், மாணவ ஒழுக்க்ம் மற்றும் ஏற்புடைய விழுமியங்கள் முதலியவை தொடர்பாக '**உருகும்நிலை**' (Melting) ஏற்பட்டுள்ள சூழமைவில் நேர் நடத்தைகளை மீளவலியுறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் ஆற்றுகைகளும் கலாநிதி. தி. கமலநாதனுடைய அறவொழுக்கப் பரிமாணங்களைப் புலப்படுத்தும்.

இவர் ஒரு சிறந்த கல்வி நிர்வாகியாக மட்டுமன்றி,வளமான **அறிவாற்றுனராகவும்** (Mentor) விளங்குதலைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. கலாநிதி தி. கமலநாதன் ஓய்வு பெறலாம். ஆனால் கல்விச் சமூகத்தில் அது ஓய்வாகக் கருதப்படமாட்டாது.

கோப்பாயின் காற்று வெளியும், கோபுரமாய் நிற்கும் மாடங்களும், ஊற்றெடுக்கும் வாண்மைக் கல்வியும், நேற்றைய சுவடுகள் – நாளைய நம்பிக்கைகள். இந்நிலையில் ஓய்வும் ஓய்வின்றித் தடம் பதிக்கின்றது.

9. 11. 2006

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

பேராசிரியர் **கலாநிதி சபா. ஜெயராசா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தோற்றம் பெற்றது ஒரு வரலாறு. தோற்றம் பெற வைத்தது ஒரு சாதனை. "கல்லூரி பிறந்த கதை" நூலில் (2001 இல்) இவற்றைத் தெளிவாக்கியிருந்தோம்.

இங்கு 'கல்லூரி வளர்ந்த கதை' உண்டு. கல்லூரியை வளர்த்து நிலையாக்கிக் கொள்வதில் எதிர் கொண்ட சவால்களும் அவற்றை வெற்றி கொண்ட வரலாறும் கூறப்படுகின்றன.

தனித்து நியமனக் கடிதத்துடன் வருகை தந்து; மிகக்குறைந்த காலத்துள் முழுநிறைவான வளாகம் ஒன்றை தாபிக்க முடிந்த கதை விரிவாகச் சொல்லப் படுகின்றது.

யாழ் மண்ணில் ஆசிரியர் கல்வியில் தடம் பதித்திருந்த ஆசிரியர் கலாசாலைகள் சிலவற்றின் மறைவாலும், புலப்பெயர்வாலும் எமது பாடசாலைக் கல்வி தடம் புரண்டு, தத்தளித்து, அவலப்பட்ட நிலையிலும் கல்வியியற்கல்லூரி யாழ்ப்பாண மண்ணில் தோற்றம் பெறத் தாமதமேயேற்பட்டது.

கல்வியியற் கல்லூரியின் தேவை கருதி விடுக்கப்பட்ட வேண்டுகோள்களும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. யாழ்ப்பாணத்து யுத்தச் சூழ்நிலையும் புத்தி ஜீவிகளின் வெளியேற்றமும் காரணங்களாக முன்வைக்கப்பட்டன.

இந்தப் போக்கு புத்தாயிரமாம் ஆண்டில் மாற்றத்துக்குள்ளாகியது. வட புலத்தே கல்வியியற் கல்லூரியை நிறுவும் மனப்போக்கு சற்று வளர்ந்தது. என்றாலும் செயற்பாட்டில் அசமந்த நிலையேயிருந்தது.

கல்லூரிக்கான விரிவுரையாளர்கள் இல்லை. ஊழியர்கள் இல்லை. ஏன் கல்லூரியே இல்லை. பீடாதிபதி நான் மட்டும் நியமிக்கப்பட்டிருந்தேன். வேடிக்கையாகவிருந்தது. வேதனை யாகவுமிருந்து.

என்னை நியமித்துப் பின்னர் செய்து தருவதாகக் கூறியவற்றையே செய்து தர முடியவில்லை. அக்காலச் சூழ்நிலையும் அதற்கு இடந்தரவில்லை.

காலச் சூழலும் எங்களுக்குச் சார்பாக வில்லையே. அதை விதியென்று வாழா திருக்க முடியுமா?

கல்வியியற் கல்லூரியை அமைக்கத் தனியே வந்துள்ளார். இது சாத்தியமா? விளையாட்டு வேலை. நடக்கக்கூடிய காரியமல்ல. வேதனைப்படுவது போல் நளினம் செய்தனர் சிலர்.

வெட்டிப் பேச்சுகளுக்குச் செவிசாய்ப்பதா?
கல்வியியற் கல்லூரியை வளர்த் தெடுப்பதன் மூலம் தமிழ் இளைஞருக்கு வேலை வாய்ப்பினைப் பெருக்கிக் கொள்ளலாம். நவீன கல்விச் செல்நெறியினை உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கியுள்ள கல்வியியற் கல்லூரிகள் மூலம் புதியவற்றை பாடசாலைக் கல்வியில் இணைத்துக் கொள்ளவும் முடியும்.

இவ்வாறான பல ஆதங்கங்கள் என் மனதிலேற்பட்டன. யாழ் மண்ணில் இக் கல்லூரியை நிலையாகப் நிறுத்தி வைத்து விடவேண்டுமென்ற எண்ணம் ஆழ் மனதில் பற்றிக் கொண்டது.

அது காலப்போக்கில் புயலாக மாறிச் சாதிக்க வேண்டும் என்ற வெறியை உருவாக்கி விட்டது.

அதற்காக உழைத்தேன். இரவு பகலாக உழைத்தேன். இறையருளைத் துணையாகக் கொண்டு உழைத்தேன். என் உழைப்பு என் சமூகத்தைச் சென்றடைய வேண்டும். இதுவே இலக்காகவிருந்தது.

இவ்விலக்கையடைய நான் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், அவமானங்கள் எல்லாவற்றையும் இந்நூலில் தந்துள்ளேன். தம்பட்டம்அடித்துக் கொள்ளவல்ல. ஆற்றிய கருமங்களைப் பதிந்துகொள்ள. கல்லூரியின் வளர்ச்சிப் படிகளை எதிர்காலச் சந்ததியினர் தெரிந்து கொள்ள. என் இலக்கை நானடையத் தடைகள் ஏற்படாதிருக்க வில்லை. அவற்றையும், அது தோன்றத் தெரிந்தோ தெரியாமலோ காரணமான வர்களையும் குறிப்பிட்டுள்ளேன். அது அவர்களைச் சுட்டிக் காட்டித் துன்புறுத்தவல்ல.

இவ்வாறான செயற்பாடுகளின் போது ஏற்படக் கூடிய இடைஞ்சல்களைத் தெளிவாக்கவே. இவ்வாறு காரியங்களில் இனிவருங்காலங்களில் ஈடுபடுவோர் இதைத் தெரிந்து கொள்ளவும், தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவும் அது உதவுமல்லாவா? இவ்விடயத்தில் முன் அனுபவமில்லாததால் நான் பல தடவைகள் சங்கடப்பட்டு வேதனைப் பட்டதுண்டு. பட்டறிவின் வெளிப்பாடே அவை.

எனக்குத் தெரியும், கொண்ட இலக்கை அடைவதில் என்னுள் வேகமிருந்தது. அவ்வேகத்துடன் இணையமுடியாத பல அன்புள்ளங்களுடன் முரண்பட வேண்டியு மேற்பட்டது.

ஆனால் உண்மையுணர்ந்து பலர் பின்னர் இணைந்து கொண்டனர். ஒருவர் இருவரால் இணையமுடியவில்லை. அதற்காகத் தொல்லை தராதிருந்திருக்கலாம். பாவமவர்கள், மறக்க மாட்டோம், மன்னிப்போம்.

நான் பிறந்த மண்ணுக்கு கல்வியில் பெரும்பயன் பெற்றுக் கொடுத்துச் சாதித்த பூரிப்பெனக்கு.

எதிர்காலச் சமூகமும் பிறந்த மண்ணுக்காகச் சாதிக்க வேண்டும். எமது மண்ணும் சமூகமும் உயர வேண்டும். இதுவே என் அவா.

**20-09-2006**
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

*கலாநிதி தி. கமலநாதன்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரி பிறந்த கதை

- கல்லூரி பிறந்த கதையில், கல்லூரியை யாழ் மண்ணில் கடும்பாடுபட்டு ஆரம்பித்து, வருடமொன்று பூர்த்தியான கதையும், அதுவரை நடந்தவற்றையும் கூறியிருந்தேன்.
- கல்லூரிக்குக் காணி கிடைத்த கதையும். நன்றாக ஓடுகின்ற குதிரையாக நான் போற்றப்பட்ட கதையும் அங்குண்டு.

## கல்லூரி வளர்ந்த கதை



- இங்கு கிடைத்த காணியில் கட்டடம் அமைத்த கதையும்,
- நன்றாக ஓடிய குதிரை, கல்லூரி மண்ணைவிட்டு வெளியே வரும் வரை தளராது ஓடிச்சாதித்த கதையும்.
- சாதனைகளின் பதிவுக்காக.

## கல்லூரிக்குக் கட்டடங்கள்

- யாழ்ப்பாணத்தின் வளர்ச்சிக்காக, தமிழ்ச் சமூகத்தின் கல்வி உயர்வுக்காக அன்பளிப்புச் செய்தார்கள்,
- ஏறத்தாள 220 பரப்புக் காணியை.
- உலக வங்கி இலங்கை ரூபாவில் 465 மில்லியனை ஒதுக்கியிருந்தது.
- காணியுண்டு,
- நிதியுண்டு,
- கட்டடம் அமைத்துக்கொள்ள முடியவில்லை.
- எவரிடம் அணுகினாலும்,
- "நாட்டு நிலமை சரியில்லை"
- இதுவே கிடைத்த பதில்.

## TETD PROJECT



- இக்காரியங்களை உலகவங்கியின் ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பான செயற்றிட்டம் ஆற்றிவந்தது.
- அது TETD Project.
- அதற்கு ஒரு திட்டப் பணிப்பாளர் பொறுப்பாக இருந்தார். பெயர் திரு. தலகொட.
- அவரிடம் சென்றேன்.
- கட்டடங்கள் கல்லூரிக்கு அமைப்பது தொடர்பாக மிக அமைதியாக உரையாடினேன்.
- என்னை உற்றுப் பார்த்தார்.
- பதில் வந்தது.
- எதிர்மறையாக வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- 2000 ஆண்டின் பிற்பகுதியில் நடந்ததிது.
- "What nonsence you are asking? Your ground situation is very bad. War is going on there. We are not prepared to invest there. As the Project Director I can't allow. So forgot about your building".
- நானிருந்த கட்டடமே இடிந்து தலையில் விழுந்தது போலிருந்தது.
- மேற்கொண்டு நான் கதைக்கவில்லை.
- TETD Project ல் பணிபுரிந்த Procurement- Officer எமக்குப் பெரும் ஆதரவு தந்தார்.
- கல்லூரிக்கான உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் குறைவின்றித் தந்துதவினார்.
- ஏனைய கல்லூரிகளுக்குக் கொடுப்பது போல் எமக்குந் தந்தார்.
- பாகுபாடின்றித் தேவைக்கேற்ப பகிர்ந்தளித்தார்.

## கல்லூரிக்கு வாகனங்கள்

- எல்லாக் கல்லூரிகளுக்கும் வாகனங்கள் தலா இரண்டு வழங்கப்பட்டன.
- *A*9 பாதை மூடியிருந்த காலத்திலும் எமக்கும் தந்தார்.
- தருவது தான் எனது வேலை,
- பறி கொடுக்காது கல்லூரிக்குக் கொண்டு செல்வது உமது வேலை என்றார்.




- பலருக்கும் அவற்றில் கண்.
- நான் நன்கறிவேன்.
- A9 மூடியிருந்ததைக் காரணங்காட்டலாமல்லவா?
- மிக விழிப்புடன் செயற்பட்டேன்.
- வாகனங்களை உத்தியோக பூர்வமாகக் கையளிப்பதற்கு ஒரு மாதம் முன்பே அதனை வழங்கும் கம்பனி சென்றேன்.
- விற்பனை முகாமையாளரைச் சந்தித்தேன்.
- பெயர் திரு. பிரதீப்.
- என்னை அறிமுகப்படுத்தினேன்.
- என்ன செய்ய வேண்டும் என்றார் அன்பாக.



- MOD. அனுமதி பெற வேண்டும், வாகனத்தை எனது கல்லூரி கொண்டு செல்வதற்கு.
- இப்போ விண்ணப்பித்தால் ஒரு மாதத்தில் அனுமதி பெறமுடியும்.
- வாகனங்களின் அடிச்சட்ட இலக்கம், இயந்திர இலக்கம் தந்துதவ வேண்டும்.
- பின்னர் அவற்றையே மாற்றாது எமக்குத் தரவும் வேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முடியுமா? என்றேன். ஏக்கத்துடன்.
- கட்டாயம் என்றார். உற்சாகமாக.
- MOD அனுமதிக்கு விண்ணப்பித்தேன்.
- சரியாக ஒரு மாதம்.
- அனுமதி கிடைக்கவும் வாகனங்களை எமக்குக் கையளிக்கவும் சரியாக விருந்தது.
- Procurement-Officer எல்லாவற்றிற்கும் உதவியாகவிருந்தார்.



- கடற்பயணத்துக்கான காப்புறுதி செய்து வாகனங்களைக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தேன்.
- 16. 07. 2001 அன்று வாகனங்கள் கல்லூரி வந்தடைந்தன.
- நீண்ட காலத்துக்குப் பின்னர் யாழ் மண்ணில் 2 புதிய வாகனங்கள்.
- பலர் பாராட்டினர், மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.
- சிலர் ............ ஏன்?

## பெரும் சேவையாளர்

- இன்று கல்லூரிக்குத் தேவையான சகல வளங்களையும் சேர்த்து விட்டேன்.
- கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான பல பொருட்கள் Procurement-Officer ரால் தரப்பட்டன.
- இவற்றைக் கப்பல்மூலம் கொண்டு வருவதற்கு திரு. மனோகரநேரு உதவினார்.
- கல்லூரிக்குப் பல வளங்களை நான் பெற்றுக் கொள்வதற்கு அவர் ஆற்றிய உதவி அளப்பரியது.



- எமது கல்லூரிக்கு மட்டுமல்ல வடபகுதிப் பாடசாலைகள் பலவற்றிற்கும் அவரின் சேவை கிடைத்துள்ளது.
- பொதுப் பரீட்சைகள் பல இக்கட்டான காலகட்டத்திலும் இவருதவியால் சீராக நடைபெற்றுள்ளன.
- பாடசாலைகளுக்கான விஞ்ஞான உபகரணங்கள், பாட நூல்கள், இலவசச் சீருடைகள் எக்கஷ்டமாகவிருந்தாலும் கொண்டுவந்து சேர்த்துவிடுவார்.
- நல்ல சேவையாளர்.
- எல்லோருக்கும் உதவிசெய்வார்.
- இன்னும் பல காரியங்களைக் கல்லூரிக்காக இணைந்து செய்திருக்கலாம்.
- ஆனால் விதி வேறுவிதமாக அமைந்து தடை செயது விட்டது.
- வேதனை.
- பல பொருட்கள் பெற முடியாமலே போய்விட்டன.
- எல்லாம் அவன் செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைமை சரியில்லை



- கல்லூரிக் கட்டடங்கள் தொடர்பாக எங்கு சென்றாலும் கிடைத்த பதில் ஒன்றே "நாட்டு நிலைமை சரியில்லை"
- "நாட்டு நிலைமை சரியில்லை"
- ஆனால் அதற்காக,
- வேறு வேறு காரியங்கள்,
- வேறு வேறு இடங்களில் நடைபெற வில்லயைா?
- எல்லாம் நடைபெறுகின்றன.
- எமது கல்லூரிக்கு மட்டும்,
- நிலமை சரியில்லை.
- வேதனையாகவிருந்தது.
- இந்நிலையில் ....
- உலக வங்கியின் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.
- அதன் Team Leader - Dr. Greeny தலைமை.
- கல்வி அமைச்சின் செயலாளர், மேலதிகச் செயலாளர்கள், எமது ஆணையாளர், மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாணக் கல்வி பணிப்பாளர்கள், கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதிகள், கல்வி அமைச்சின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
- நானும் கலந்து கொண்டேன்.
- கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் Dr. Greeny அவர்களைச் சந்தித்தேன்.
- கட்டடப் பணிகள் பற்றி கலந்துரையாடினேன்.
- ஆதரவாக, அன்பாகக் கதைத்தார்.
- உலக வங்கியின் விதிமுறைகளுக்கிணங்க யுத்தம் நடக்கும் பிரச்சினைக்குரிய பகுதிகளில் எவ்வித அபிவிருத்தி வேலைகளும் செய்வதில்லை. செய்ய முடியாது.
- யாழ்ப்பாணத்தில் அமைதியேற்பட்டதும் கட்டடங்கள் நிறுவ ஏற்பாடு செய்வோம்.
- அப்படியான சந்தர்ப்பத்தில் நானே நேரில் வந்து கவனிப்பேன்.
- உங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணம் வேறு எதற்கும் செலவழிக்கப்பட மாட்டாது.
- கவலையை விடுங்கள். கட்டாயம் நடக்கும் என்றார்.
- பாலைவனச் சோலை போன்றிருந்தது. அவர் வார்த்தை.
- கூட்டம் ஆரம்பமாயிற்று.
- Dr. Greeny கூட்டத்தினை முன்னெடுத்தார்.
- பல விடயங்கள் ஆராயப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வியியற் கல்லூரிகள் சம்பந்தமாகவும் பேசப்பட்டது.
- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி,
- அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஏற்ற சூழ்நிலை வரும்போது கட்டட வேலைகள் ஆரம்பமாகும், என்றார்.
- பின்னர் என்பக்கம் திரும்பி,
- "Mr. Jaffna President, "Please make peace in your area. We can start the construction work there."
- சிரித்தபடி ஒரு விதமாகக் கூறினார்.
- கூறிய விதத்தில்,
- சபை முழுவதும் என்னைப் பார்த்து 'கொல்' என்று சிரித்தது.
- கடும் சண்டை நடந்த காலமது.
- சமாதானம் கானல் நீராகவிருந்தது.
- என்னால் சமாதானத்தை....?
- பல மேதைகள், நாடுகள், இணைத்தலைமை நாடுகள் வல்லரசுகள்– முடியவில்லை.
- எனது கட்டட முயற்சிகளை நடைபெறமுடியாததுவென, ஒரு பொருட்டாக மதிக்காமை அந்த நளினத்துக்குக் காரணமோ?
- ஆனால் நான் மனந்தளரவில்லை.
- அதைத் தொடர்ந்த நாட்கள் சில....

## பிரதம ஆணையாளர்





- ஒரு நாள் பிரதம ஆணையாளர் அறையில் நான்,
- உரையாடிக் கொண்டிருந்தேன்.
- யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பில்லை.
- வேறு எங்காவது கல்லூரியைக் கட்டுவோமா? என்றார் ஆணையாளர்.
- மறுத்தேன்.
- பிரச்சினை வரும் சேர் என்றேன்.
- அங்கு பாதுகாப்பில்லையே என்றார் மீண்டும்.
- இலங்கையில் எங்குதான் பாதுகாப்பு?
- வெளிப்படையாகக் கேட்டேன்.
- மறுமொழியில்லை.
- அவரைத தொலைபேசி அழைத்தது.
- அவர் busy ஆனார்.
- பின்வந்த சில நாட்களில்,
- கட்டுநாயக்காவில் பலத்த தாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– பத்திரிகைகள் வானொலிகளில் பெரிய செய்தியவை.
– அவ்வேளை ஒரு நாள் ஆணையாளரைச் சந்திக்க வேண்டியிருந்தது.
– அலுவலகம் சென்றேன்.
– ஆணையாளர் அங்கிருந்தார்.
– வேலைப்பளு குறைவான நிலையிற் காணப்பட்டார்.



– அமரும்படி பணித்தார்.
– அவருடன் மிக நெருக்கமெனக்கு.
– என்னை மிகவும் கவர்ந்த மனிதர்.
– நல்ல நிர்வாகி. வழிகாட்டி.
– யாழ்ப்பாணத்தில் கல்விக் கல்லூரியை அமைக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டு செயற்பட்டவர்.
– அவருக்கு என் மீது நம்பிக்கை.
– எமது கல்லூரி ஆரம்பித்து முதலாம் வருடப் பூர்த்தியின் போது யாழ்ப்பாணம் வந்து எம்மை ஊக்குவித்தவர்.
– நீண்ட காலத்தின் பின்னர் யாழ்ப்பாணம் வந்த முதல் அரச ஊழியர் அவர்.
– எமது அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் வந்து எமது குறைகளை, தேவைகளை அறிந்து கல்வி அமைச்சில் நாம் அவற்றைப் பெற உதவியவர்.
– எமது அவலங்களைக் கல்வி அமைச்சுக்குத் தெளிவாக்கியவர்.



– அவரிடம் உரிமையுடன் நாம் எமது தேவைகளைக் கேட்டுப் பெறுவதுண்டு.
– அந்த உரிமையுடனும் புரிந்துணர்வுடனும் அன்று நான் கேட்டேன்,
– "சேர் வேறு எங்காவது கல்விக் கல்லூரியைக் கட்டுவோமா?"
– சிரித்தார்.
– அவர் சிரிக்கும் போது அழகாக விருப்பார்.
– அந்தச் சிரிப்புத்தான் மறுமொழியுமாயிற்று. எனக்கு நம்பிக்கை வந்தது.
– இனி யாரும் எமது நிதியில் வேறு இடத்தில் கல்லூரி கட்ட முயற்சிக்க மாட்டார்கள்.

## வட்டமிட்ட பருந்துகள்

– ஆனால் வேறு சிலர் எமது நிதியிலிருந்து குறிப்பிட்ட தொகையைப் பிடுங்கிக் கொள்ள முயற்சித்தனர்.
– யாழ்ப்பாணத்தில் இப்போதைக்குப் பயன்படுத்த முடியாது. அதில் சிறிதைத் தாருங்கள் என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலக வங்கியினர் மசியவில்லை. மறுத்தனர்
- அவர்களுக்கு நன்றி.
- பெரு நன்றி, அன்றைய வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் திரு. க. பரமேஸ்வரன் அவர்களுக்கு.
- மிக உறுதியாகத் தனது அதிகாரம் முழுவதையும் பயன்படுத்தி எமது நிதி வேறெங்கும் செல்ல விடாது தடுத்தார்.
- காப்பாற்றி வைத்தார். பாதுகாப்பு அரணும் அமைத்தார்.



- மண்பற்று, மகிழ்ச்சியைத் தந்தது.
- மண்பற்று, மொழிப்பற்று மிக்கவராய் துணிவுடன் கல்விக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும் என்று பாடுபட்ட இன்னுமொரு செயலரும் மறக்க முடியாதவர்.
- அவர் திரு. சுந்தரம் டிவகலாலா.
- "Mr. Nihal, you start the college of Education in Jaffna. I will Provide everything to the college."
- என்று எமது பிரதம ஆணையாளரை எப்போதெல்லாம் சந்திப்பாரோ அப்போதெல்லாம் நச்சரிக்கத் தவறுவதில்லை.
- பிரதம ஆணையாளரே கூறிய செய்தியிது.
- கல்லூரி வரலாற்றில் அவரை மறக்க முடியாது.
- துணிவான நிர்வாகி. நிதானமானவர்.
- நானும் அவர்களும் யாழ் இந்துவின் புதல்வர்கள்.
- கட்டடம் அமைக்கும் பணியை முன்னெடுப்பதில் தொடர்ந்து செயற்பட்டேன்.
- மனந்தளரவில்லை.

## ஆய்க்கினை கொடுத்தேன்

- உலக வங்கியினரையும் கல்வி அமைச்சு அதிகாரிகளையும் தொடர்ந்து ஆய்க்கினை கொடுத்த வண்ணமேயிருந்தேன்.
- இவர்களைச் சந்திப்பதற்காக அவர்களின் அலுவலக வாயிலில் மணிக்கணக்கில் தவங்கி: .ந்தேன்.
- தேநீர் கூட அருந்தாது, சிறுநீர் கழிக்கவும் செல்லாது நாட்கணக்கில் அங்கு இருந்திருக்கின்றேன்.
- சந்தித்து, கட்டடம் பற்றிக் கதைக்காது நான் திரும்புவதில்லை.
- எப்பாடுபட்டாலும் இறுதியில் கிடைத்த மறுமொழியொன்றுதான்,
- "நிலைமை சரிவர முயற்சிப்போம்."
- இப்போ பெரிய கட்டடங்கள் யாழ்ப்பாணத்தில் கட்ட முடியாது.
- நான் இவ்விடயத்தில் சோர்ந்து விடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- எங்கு சென்றாலும் எக் கூட்டங்களில் கலந்து கொண்டாலும் இதைப் பற்றியே கேட்டேன்.
- ஒரு முறை அரச அதிபர் கட்டடக் கதையை விட்டு வேறு கதை என்றார் ஒரு கூட்டத்தில்.
- என்னிடம் இப்போதைக்கு வேறு கதையில்லை என்றேன்.
- கல்லூரிக் கட்டடங்கள் பற்றியே நனவும் கனவும்.
- அடிக்கடி தொந்தரவு தந்தது.
- எனக்கு என் மீதே பயம் வந்தது.
- இதுவே ஒரு நோயாகி விடுமோ?
- யோசனையாகவிருந்தது.
- மற்றவர்களிடம் கூறவில்லை.
- பலவீனம் என்று விடுவார்கள்.
- இறைவனிடந்தான் கூற வேண்டும்.
- முருகனிடம் முறையிட்டேன்.
- சற்று அமைதியாக விருந்தது.
- பெரிய கட்டடங்கள் பின்னர் கட்டலாம். சிறிய கொட்டில்களையாவது அமைத்து எமது சொந்த இடத்தில் தனித்துவமாக நாம் தொழிற்பட உதவுங்கள் என்று உலகவங்கிக்கு எழுதினேன்.
- தற்காலிக வேலைகளுக்கு உலகவங்கி பணந்தராது.
- கேட்க வேண்டாம். என்று மறுமொழி கிடைத்தது. அதுவும் உடன் கிடைத்தது.
- நான் சோர்ந்துவிடவில்லை.
- இன்னொரு நிறுவனத்துடன் இணைந்திருந்து சுதந்திரமாக இயங்க முடியவில்லை. மாணவர்கள் ஆளுமை விருத்தி, பாதிப்புக்குள்ளாகின்றது.
- பயிற்சியில் பயனில்லை.
- உதவி செய்யுங்கள் என்று மீண்டும் எழுதினேன்.
- மறுமொழியில்லை.
- தொடர்புமில்லை. சோர்ந்து போனேன்.




## ஆய்க்கினை பெற்ற வெற்றி

- இரண்டு வாரங்களின் பின்னர் உலகவங்கியினரிடமிருந்து செய்தி வந்தது.
- திருமதி. சரஸ்வதி அவர்கள் அறிவித்திருந்தார்,
- அவர் உலகவங்கி செயற்றிட்டப் பிரிவைச் சேர்ந்தவர்.
- எனக்கு நல்ல நண்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மிக அன்பாகப் பழகுவார்.
- அவர் தந்த அறிவுரை :
- "விடாது முயற்சி செய்யுங்கள்" "வெற்றி கிடைக்கும் வரை முயற்சி செய்யுங்கள்"
- நான் அதை இறுகப் பற்றிக் கொண்டேன்
- அவர் அனுப்பிய செய்தி "உலக வங்கிக் குழுவொன்று உங்கள் கல்லூரி நிலையறிய கல்லூரிக்கு 14. 08. 2001 அன்று வருகை தரவுள்ளது."
- உலக வங்கியின் Country Director மரியானா ரொடோறோவா தலைமையில் அக்குழு கல்லூரி வந்தது, குறிப்பிட்ட திகதியில்.



- திருமதி சரஸ்வதி 'வந்துள்ள Country Director உடன் நன்றாகக் கதைத்து கட்டடப் பணிகளுக்கான சம்மதத் தைப் பெற முயற்சி செய்யுங்கள்' என்றார்.
- உற்சாகமாகத் தயாரானோம்.
- எங்கள் கல்வியியலாளர்களுடன் வைத்தியகலாநிதி லயன். வை. தியாகராசா அவர்களுமிருந்தார்.
- கட்டடம் பற்றியும் அதன் தற்போதய அவசிய தேவை பற்றியும் கூற ஆரம்பித்தேன்.
- "கட்டடம் பற்றிக் கதைக்க வேண்டாம்" என்றார் கடும் தொனியில் மரியானா.
- இடி விழுந்தது போலிருந்தது.
- அவரை வரவேற்க நாம் பல ஏற்பாடுகள் செய்திருந்தோம்.
- உபபீடாதிபதி திரு. எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அவர்கள் அமைதியாகப் பல ஆயத்தங்களைச் செய்திருந்தார்.
- இரவு பகலாக இதற்காகப் பாடுபட்டார்.
- பதாதை கூடப் பெரிதாகக் கட்டி வரவேற்றோம்.
- எல்லாம் கட்டிடத்துக்காகத் தானே.
- அவை வீண் முயற்சியா?
- ஈயாடவில்லை எவர் முகத்திலும்.



- A9 பாதை திறந்தாற்றான் கட்டடம் அமைக்கும் முயற்சி செய்யலாம் என்றார்.
- அவையில் பெரும் அமைதி நிலவியது.
- வைத்தியகலாநிதி. வை. தியாகராசா எழுந்தார்.
- 15–20 நிமிடங்கள் உரையாற்றினார்.
- கட்டடங்களது தேவையின் அவசியத்தை விளக்கினார்.
- எங்களுக்கு இப்போ எது அவசியம் தேவைப்படுகின்றதோ அதைத்தான் கேட்போம்.
- மாணவர்களும் விரிவுரையாளர்களும் படும் கஷ்டங்களை விபரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீங்கள் எங்கள் நிலையுணர்ந்து தேவையை நிறைவு செய்து தாருங்கள்.
- கோடுபோட்டு வரையறைக்குள் நின்று கருமமாற்றக்கூடாது.
- களநிலையைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.
- அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்
- அதுவே எமக்கு நீங்கள் செய்யும் உதவி என்றார்.
- மரியானாவின் முகத்தில் மாற்றம் தென்பட்டது.
- சாந்தமாகக் கதைக்கத் தொடங்கினார்.
- கொழும்பு சென்று முடிவை அறிவிப்பதாகக் கூறினார்.



- நல்ல முடிவாக அறிவியுங்கள் என்றேன்.
- சிரித்தார்.
- அப்பாடா இவரும் சிரிக்கின்றாரே! வியந்தேன்.
- ஏனெனில்,
- எமக்குத் தெரியும் இவர் வித்தியாசமானவர்.
- நானும் டாக்டரும் நன்கறிவோம்.
- முதல் நாளே எமக்குத் தெரியும்.
- யப்பான் நாட்டைச் சேர்ந்தவரிவர்.
- அவரது யாழ்ப்பாண வருகை,
- தங்கவுள்ள இடம்,
- ஆகியவற்றை முதலே அறிந்து அவரைச் சந்திக்கச் சென்றிருந்தோம்.
- சில ஞாபகப் பொருட்களையும் கொண்டு சென்றோம்.
- அதையொரு "Courtesy visit" ஆகவே நாம் கருதிச் சென்றோம். எங்கள் பண்பாடு.
- எங்களுக்காக வந்திருக்கின்றார்.
- நாம் சென்று பார்க்கத்தானே வேண்டும்.
- அங்கு நின்றவர் மூலம் எமது வருகையை அறிவித்து விருந்தினர் இருக்கையில் இருந்தோம்.
- அந்தப் பெண்மணி உள்ளே சென்றார்.
- அங்கிருந்து பெரிதாக எமக்குக் கேட்டது.
- "நான் யாருக்கும் இப்போது சந்திப்பதற்கு நேரம் கொடுக்கவில்லை. நேரமில்லை என்று கூறு"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அந்தப் பெண்மணி வந்தார்.
- நாங்கள் வெளியேறினோம்.
- அவமானம். அதுவும் இப்படியா?
- பிரம்படி பட்டோம்.
- டாக்டர் வேதனைப்படுவாரோ?
- எனக்கு இது புதியதல்ல.
- டாக்டரையும் இதற்குள் விழுத்தி விட்டேனே?



- வெளியில் வந்ததும் தயங்கியபடி "Sorry Dr" என்றேன் குற்றவுணர்வுடன்.
- No... No... இதற்கெல்லாம் எதற்கு Sorry?
- பொது வேலையென்று வந்தால் இதையெல்லாம் எதிர்கொள்ள வேண்டியதுதான்.
- Take it easy என்று கூறிச் சிரித்தார்.
- பெரிய மனம் படைத்தவரவர்.
- கல்லூரியின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் என்னுடன் தோள் கொடுத்துதவியவர்.
- எனக்கு உற்சாகமளித்தார்.
- திருப்தியடைந்தேன்.
- கல்லூரிக் கட்டடம் அமைத்தல் தொடர்பாக எனக்கு விழுந்த மூன்றாவது அடியிது.
- தாங்கிக் கொண்டேன்.
- சோர்ந்து வாழாதிருக்கவில்லை.
- ஒவ்வொரு அடியும் புதிய உற்சாகத்தையே அளித்தது.
- எடுத்த கருமத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்ற வைராக்கியமே மலிந்தது.
- உலக வங்கிக் குழுவினர் கொழும்பு சென்றனர்.



- நாம் வழியனுப்பச் செல்லவில்லை.
- கோபமில்லை.
- ஏன் வீண் வம்பு.
- சில நாட்கள் கழிந்தன.
- திருமதி சரஸ்வதி தகநாயக்காவுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றேன்.
- அவர் அழைப்புக் கிடைக்கவில்லை.
- கொழும்பு சென்று அறிவிப்பதாகக் கூறிச்சென்றவர்கள்.
- ஒரு அறிவித்தலுமில்லை.
- சொந்த மண்ணுக்குச் சென்று விடவேண்டும்.
- அகதிகளாக எவ்வளவு காலமிருப்பது.
- தவிப்பாகவிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய செய்தி



- வரண்ட பூமிக்கு மழை போல,
- செய்தியொன்று.
- திருமதி. சரஸ்வதி அவர்களிடமிருந்து.
- இடைக்கால ஏற்பாடாக ரூபா 35 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்,
- அத்தியாவசிய கட்டடங்களை அமைத்துக் கொள்ளும்படியும்,
- உங்கள் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியிதுவென்றும்,
- தொடர்ந்து முயன்று நிரந்தரக் கட்டடங்களை அமைத்துக் கொள்ள தனது வாழ்த்துக்கள், என்றும் எனக்கு அறிவித்திருந்தார்.
- வடக்குக் கிழக்கு மாகாண அமைச்சு ஊடாகக் கட்டடப்பணிகள் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார்.
- எனது மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.
- உரியவர்களுடன் தொடர்பு கொண்டேன்.
- மள மளவென்று செயற்பட்டேன்.
- திரு. பிரான்சிஸ் - வடக்குக் கிழக்குக் கல்வி அமைச்சின் பொறியியலாளர்,
- நல்ல ஒத்துழைப்புத் தந்தார்.
- கட்டட ஒப்பந்த வேலைகளை ஈறோவில் நிறுவனத்தினர் ஏற்றுக் கொண்டனர்.
- எமது தேவையுணர்ந்து செயற்பட்டனர்.
- வேண்டும் உதவிகளை நாம் செய்து கொடுத்தோம்.

## முயற்சி திருவினையாக்கும்

- 18. 03. 2002 அன்று கல்லூரிக்கு என்னால் அத்திவாரமிடப்பட்டது.
- வேலைகள் துரிதமாக நடைபெற்றன.
- 19. 01. 2003 தைப்பூச நன்னாளிலே திருமதி சரஸ்வதி தருமலிங்கம் புதிய கட்டடத்தினைத் இறைமாட்சி வைபவத்துடன் ஆரம்பித்து வைத்தார்.
- சரஸ்வதி என்ற நாமத்துக்கும் எமது கல்லூரிக்கும் நிறையவே தொடர்பு ஏற்பட்டு விட்டது.
- கல்வியின் தெய்வம் சரஸ்வதி .
- கலைகளின் அதிபதி சரஸ்வதி.
- எங்களுக்குக் கட்டடங்கள் அமையத் தோன்றாத் துணையாக நின்றுதவியவர் சரஸ்வதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- இன்று கட்டடத்தைத் திறந்து வைத்தவர் சரஸ்வதி.
- எனவே சரஸ்வதியை நாம் மறவாது கல்லூரி முன்றலில் நிலையாக்கினோம்.
- கட்டடங்களில் அன்றே மாணவர் தங்கினர்.
- அப்பாடா!
- திருப்தி எனக்கு.
- இதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டேன்.
- எத்தனை அவமானங்களைத் தாங்கினேன்.
- ஆனால் இன்று:
- பட்ட கஷ்டங்கள்,
- எதிர் கொண்ட அவமானங்கள்,
- துரும்பாகித் தூசாகிப் பறந்தன.
- சொந்த மண்ணில் நாம்.
- சொந்தக் காலில் நாம்.
- நினைக்க முடியாத சாதனை.
- முயற்சி திருவினையாக்கும்.
- முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்.
- முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.
- என் தமிழ் உபாத்தியாயர் பண்டிதர் க. செல்லத்துரை யாழ் இந்துவில் எனக்குச் சொல்லித் தந்தவை.
- இன்று அனுபவத்தில் தெரிந்து கொண்டேன்.
- முயற்சியின்றி இருத்தல், ஈடுபாடு காட்டாமை, விருப்பமின்றிச் செயற்படல், புறங்கூறல், எல்லாம் விதிப்படி அன்று வாழாதிருத்தல்,
- சோம்பேறிகளின் செயல்.
- எதையும் சாதிக்க முடியாது.
- ஆர்வம், ஈடுபாடு, ஒழுக்கம், ஒரு பொழுதும் ஓயாதிருத்தல், தூய்மை, உண்மை, நேர்மை, ஊக்கம்,
- எடுத்த காரியத்தைத் திடமாகச் சாதிக்கும். சாதித்துமுள்ளன.
- வரலாறு காட்டும் உண்மையிது.
- புதிய கட்டடத்திற்கு நாம் வருகை தந்த அன்று,
- அதிசயமொன்று நிகழ்ந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்கள் வழிபாட்டிற்கு கோவிலொன்று அமைக்கும் முயற்சியும் ஏற்பாடாயிற்று.
- அதுபற்றிய விபரம் கோவில் கும்பாபிஷேக கலாசுரபி மலரில் விபரமாகக் கூறியுள்ளேன்.
- ஆர்வமுள்ளவர்கள் படித்துப் பார்க்கலாம்.
- கோவிலுக்கு 19. 01. 2003 இல் அத்திவாரமிட்டு 31. 08. 2003 இல் கும்பாபிஷேகம் செய்து கொண்டோம்.



- 7 மாத காலத்துள் கோவிலொன்றைக் கட்டி முடித்தேன்.
- 9 மாதங்களில் கல்லூரியொன்றின் அவசிய கட்டடங்களை அமைத்துக் கொண்டேன்.
- கல்லூரியைப் புதிதாக நிறுவிக் கொண்டேன் சொந்தமண்ணில்.
- எல்லாம் இறையருள்.
- என் செயலாவது யாதொன்றுமில்லை.
- ஒரு கல்வி நிறுவனத்தையும், கோவிலையும் அமைத்துக் கொள்ள எனக்குச் சந்தர்ப்பம் தந்த இறையருளை மனதார வணங்குகின்றேன்.
- அந்தப் புண்ணியம் நீண்டு கிடைக்க இறையருளை வேண்டுகின்றேன்.



- கோவில் கட்டும் பணிக்கு இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை உதவியது.
- அதன் தலைவர் உயர்திரு. நா. சீவரத்தினம் ஐயா அவர்கள் 10. 10. 2003 இல் கல்லூரி வந்தார்.
- கோவிலைச் சுற்றிப்பார்த்தார். மண்டபம் கட்டிக்கொள்ள நிதி உதவி மேலும் செய்தார்.
- அழகான மண்டபம் அமைத்துக் கொண்டோம்.
- இடைக்காலக் கட்டடப் பணிகள் பூரணமாக முடிவுற்றுவிட்டன.
- கல்லூரியும் அங்கு தொழிற்பட ஆரம்பித்துவிட்டது.
- அடிப்படைத் தேவைகள் பல நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.
- ஒவ்வொன்றாகக் கவனித்து வந்தோம்.
- விரிவுரையாளர்களுக்கு மகிழ்ச்சி. திருப்தி.
- புதிய இடம். சொந்த இடம்.
- புதிய கட்டடம். வசதியான வளாகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சந்தோஷமாக வேலை செய்தார்கள்.
- மாணவர்களும் மகிழ்ச்சியாக விருந் தனர்.



## முழுத்திருப்தியில்லை

- ஆனால்.
- எனக்கு முழுத்திருப்தியில்லை.
- வேதாளம் அடிக்கடி எங்கோ ஏறுமாமே.
- இடைக்காலக் கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலும்,
- எமது கல்லூரிக்கான Original கட்டடங்களைப் பெற்றிட வேண்டும் என்ற பேரவா அடிமனதில்.
- ஏனெனில்.........
- நிறைவு பெற்றது இடைக்கால ஏற்பாடே .
- உலக வங்கியினால் கட்டப்படவேண்டிய கட்டடங்கள் இன்னும் ஆரம்பிக்கவில் லையே.

கவலை தொடர்ந்திருந்தது.



- நானும் திரு. பா. தனபாலனும் ஞாயிற்றுக் கிழமைகளில் அருட்கவி விநாசித்தம்பி ஐயாவிடம் சென்று ஆசீர்வாதம் வாங்கு வதுண்டு.
- எமது பலமும், உஷாரும், நம்பிக்கையும் அவர் வழங்கும் ஆசிர்வாதத்தினால் கிடைத்தவையே.
- 'அன்று ஞாயிற்றுக்கிழமையும் சென்றோம்.
- எமது கவலையைக் கூறினோம்.
- கவலையை விடுங்கள்.
- நீர் அடுத்த தடவை கொழும்பு செல்லும் போது எல்லாம் கிடைக்கப் போகின்றது என்றார்.

## அமைச்சர் வருகை



- பீடாதிபதிகள் கூட்டத்தில் கலந்து கொள்ளக் கொழும்பு சென்றேன்.
- கல்விச் செயலர் என்னை அழைத்தார்.
- இப்போ நாட்டில் அமைதியேற்பட்டி ருந்தது.
- 22.02.2002 இல் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தி பட்டிருந்தது.
- A9 பாதை.யும் திறக்கப்பட்டிருந்தது.
- செயலர் அவர்களுடைய அலுவலகம் சென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "கல்வி அமைச்சர் குழு யாழ்ப்பாணம் வரவுள்ளது."
- கல்வி அமைச்சர். Dr. கருணாசேன கொடித்துவக்கு, "உமது கல்லூரிக்கு வரவுள்ளார்."
- "ஏற்பாடுகளைக் கவனிக்கமுடியுமா?" என்று கேட்டார்.
- சம்மதித்தேன்.



- இதுதான் சந்தர்ப்பமென்று கட்டடங்கள் பற்றிக் கேட்டேன்.
- உலகவங்கிக் குழுவினரையும் அழைத்து வருகின்றோம்.
- பேசி முடிவெடுப்போமென்றார்.
- உற்சாகமாகத் தொழிற்பட்டேன்.
- வரவேற்பு, மாலைமரியாதை, நினைவுப்பரிசு வழங்கல் என அமர்க்களப்படுத்தினோம்.
- வழக்கமாக அமைச்சரொருவர் யாழ்ப்பாணம் வருவதானால் அரச அதிபருக்கு அறிவிப்பார்.
- அவர் பாதுகாப்பு ஒழுங்குகளையும் ஏனைய நிகழ்ச்சி நிரலையும் தயாரிப்பார்.
- கல்வி அமைச்சரின் வருகை வேறு விதமாகவிருந்தது.
- பீடாதிபதி எனக்கு மட்டுமே பொறுப்புத் தரப்பட்டது.
- அவரது சொந்தப் பாதுகாப்பு உத்தி யோகத்தர்கள் முதல் நாளே வருகை தந்திருந்தனர்.
- கல்வி அமைச்சு ஒரு நிகழ்ச்சி நிரலையனுப்பியிருந்தது.
- அதனுடன் எமது கல்லூரி நிகழ்ச்சியைச் சேர்க்கும் படி கேட்டிருந்தனர்.
- அந்த நிகழ்ச்சி நிரலில் எனக்குத் திருப்தியில்லை.
- பெரிய வசதியான பாடசாலைகளுக்கான செல்கையாகவே நிகழ்ச்சி நிரலிருந்து.
- அங்கு அமைச்சர் செல்வதால் எங்கள் கல்வி கல்வி அபிவிருத்திக்கு என்ன பயன்?
- வசதிகுறைந்த பாடசாலைகளுக்குச் செல்லவேண்டும்.
- அவற்றைப் பார்வையிடவேண்டும்.
- வளர்ச்சிக்குதவ வேண்டும்.
- குறிப்பாக அன்றைய காலத்திலே பெரும் அழிவுக்குட்பட்டிருந்த பாடசாலைகள் சாவகச்சேரிப் பாடசாலைகள்.
- அங்கு அமைச்சரை அழைத்துச் சென்று காட்டினாற்றானே பயனேதும் கிடைக்கும்
- அமைச்சர் குழு வந்தபின் எடுத்துக் கூறுவோம் என்று தீர்மானித்தேன்.
- 21. 06. 2002 அன்று கல்வி அமைச்சரும் உலக வங்கிக் குழுவினரும் வந்தனர்.
- காலை பலாலி விமானத்தளம் சென்றேன்.
- வைத்திய கலாநிதி லயன். வை. தியாகராசா அவர்களும் அன்றைய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவராசா அவர்களும் எமது கல்லூரி வாகனத்தில் வந்தனர்.
- வாகனத்தின் சாரதி நானே.
- அமைச்சருக்கு மாலையணிவித்து வரவேற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ஏனையோரை அறிமுகம் செய்து வைத்தேன்.
- எனது வாகனம் முன்னே செல்ல தொடர்ந்தன ஏனைய வாகனங்கள்.
- வைத்திய கலாநிதி. தியாகராசா அவர்களின் வீட்டில் காலையுணவு ஆயத்தமாகவிருந்தது.
- எல்லோரும் சுவைத்து உண்டனர்
- தொடர்ந்து கல்லூரிக் கட்டிடப் பணிகளைப் பார்வையிடக் குழுவினருடன் சென்றோம்.

## சிந்தனை - சொல் - செயல்

- அங்கு சென்றபோது எனக்குப் பெரும் ஆச்சரியம்.
- Dr. Greeny- உலகவங்கியின் Team Leader நின்றார்.
- வாகனத்தால் இறங்கி ஓடிச் சென்று அவரைக் கட்டித் தழுவி,
- எப்போ வந்தீர்கள்? என்றேன்.



- நேற்றே வந்து விட்டதாகவும்,
- கூறியது போல் வந்துள்ளேன்.
- கொடுத்த வாக்குறுதிக்காக வந்தேன்.
- மாலை 2 மணிக்கு கூட்டமுண்டு.
- அதில் ஏனைய கட்டடங்கள் பற்றி முடிவெடுப்போம் என்றார்.
- அருட்கவி ஐயா கூறியது நடக்கப் போகின்றது.
- அவர் ஒரு ஞானி. மக்களின் வழிகாட்டி.
- மகான். முக்காலமும் உணர்ந்த முனிவர்.
- சைவநாயன்மார்கள் வரிசையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்.



- ஞானச்சித்தர்.
- அவர்,
- இன்று எம்முடன் இல்லாதது,
- பெரு நஷ்டமே. அளவிடமுடியாத வேதனை.
- இயற்கையை வெல்ல முடியுமா?
- என்றும் அவரை வணங்குவோம்.
- நிகழ்ச்சி நிரலின் படி அங்கிருந்து,
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சென்றோம்.
- துணை வேந்தருடன் சந்திப்பு இடம்பெற்றது.
- அவ்வேளையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- சாவகச்சேரி சென்று அழிவுற்ற பாடசாலைகளைப் பார்வையிடலாமா Sir என்று அமைச்சரை மெதுவாகக் கேட்டேன்.
- கட்டாயம் செல்ல வேண்டும் அழைத்துச் செல்லுங்கள் என்றார்.
- வடமராட்சிப் பாடசாலைகள் சில பார்வையிட்ட பின்னர் நெல்லியடியூடாக வரணி ஆசிரியர் நிலையம் சென்று சாவகச்சேரி வந்தோம்.
- பெரும் அழிவுக்குள்ளான சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி சென்றோம்.
- அமைச்சர் மிக ஆறுதலாக அழிவுகளைப் பார்வையிட்டார்.
- அப்பாடசாலையைப் புனரமைக்க அமைச்சர் உதவியதாக பின்னர் அறிந்தேன்.
- Dr. Greeny கூறியபடி 2 மணிக்குக் கூட்டம் நடைபெற்றது.
- விடயங்கள் கலைந்துரையாடப்பட்டன. முடிவில்;
- கட்டம் கட்டமாக ஏனைய கட்டடங்களையும் கட்டிக் கொள்ள Dr. Greeny அனுமதியளித்தார்.
- நடைபெற்றுக் கொண்டிருப்பது Phase I என்றும்,
- Phase II Phase III Original Plan இல் உள்ளவை என்றும்,
- TETD Project க்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் பணித்தார்.
- Project Director திரு. கலகொடவும் அக்கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தார்.
- Phase II க்கான கேள்வி கோரவேண்டிய திகதி வேலை முடிக்க வேண்டிய திகதி,
- PhaseIII க்கான கேள்வி கோரவேண்டிய திகதி, முடிவடைய வேண்டிய திகதி,
- Dr. Greeny அவர்களால் வரையறுத்துக் கூறப்பட்டன. திட்டவட்டமாக.
- ஒவ்வொன்றிலும் அமைக்கவுள்ள கட்டடத் தொகுதிகளை என்னுடன் கலந்து தீர்மானித்துக் கொண்டார்.



- இப்போது சந்தோஷந்தானே என்றார்.
- பூரண திருப்தி யென்றேன்.
- பொறுப்பான பதவியிலுள்ளவர்கள் இவ்வாறு தான் பொறுப்புடன் கடமையாற்ற வேண்டும் என்று என்னைப் பாராட்டினார்.
- கைலாகு தந்து வாழ்த்தினார்.
- மறக்க முடியாத மனிதர்.
- சொன்னதைச் செய்த மனிதர்.
- Real Gentleman.
- சிந்தனை – சொல்– செயல் இணைந்த மனிதர்
- எமது கல்லூரியின் தாரக மந்திரம் அதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒருவர் தான் சிந்திப்பதை வார்த்தைகளால் கூறி, கூறியதைச் செயற்படுத்தின் யாண்டும் இடும்பையில.
- சிந்தனை ஒரு புறம் சொல் இன்னொரு புறம் செயல் மறுபுறம் அமையின்,
- வாழ்வு பூராவும் துன்பமே.
- இதை மனதிருத்தி சிந்தனை➔ சொல்➔செயல் என்று எமது தாரக மந்திரத்தை அமைத்தேன்.
- இதைப் பின்னோக்கியும் பார்க்கலாம். செயல் ➔ சொல் ➔சிந்தனை
- செய்வதைச் சொல்லி சொல்வதைச் சிந்தித்தல்.
- இருவழித் தொடர்பாக அதை அமைத்தேன்.
- சிந்தனை ⇄ சொல் ⇄ செயல்
- இதை முழுமையாக எமக்காகச் செயற்படுத்தியவர் Dr. Greeny.
- அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்.
- என்றும் நன்றியுடம் எமது மனதிலிருப்பார்.
- எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து தந்த அமைச்சரும் செயலரும் நன்றிக்குரியவர்கள்.
- மாலையில் கல்லூரியில் பெருவிழா ஏற்பாடாகியிருந்தது. அனைவரும் கல்லூரிச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.
- அமைச்சர், செயலர், மேலதிகச் செயலர்கள் மனதாரக் கல்லூரியைப் பாராட்டினர்.
- அமைச்சர் அங்கிருந்து நேரடியாக விமான நிலையம் சென்றார்.
- வழியனுப்பி வைத்தோம்.
- நன்றி கூறினோம்.
- செயலரும் ஏனையவர்களும் அன்றிரவு தங்கி, அடுத்த நாள் காலை தரை வழியாகச் செல்லவிருந்தனர்.
- டாக்டர் வீட்டிலேயே தங்கினர்.
- அன்று இரவு அவர்களை யாழ்ப்பாணம் சுற்றிக் காட்டினோம்.
- புகழ் பெற்ற பாடசாலைகள், நல்லூர் கந்தசாமி கோவில், நாகவிகாரை, கோட்டை, நூல் நிலையம் எல்லாம் சென்றோம்.



- இரவு நேரம் – நானே, சாரதியாகிச் சென்றதால் செயலரும் ஏனையோரும் ஆச்சரியப்பட்டனர்.
- பாராட்டினர்.
- இப்பாராட்டுக்கள் பின்வந்த காலங்களில் கல்லூரிக்காகவும் எமது சமூகத்துக்காகவும் சிலவற்றைச் செய்து கொள்வதற்கு உதவிற்று, ஒரு உதாரணம்.

## யாழ்ப்பாணத்திற் பரீட்சை

- கல்லூரி அனுமதிக்காக விண்ணப்பித்தவர்களில் ஆங்கில பாடநெறிக்கு தகுதிகாண் பரீட்சை நடைபெறுவதுண்டு.
- யாழ்ப்பாணம், மகாவலி, பஸ்துன்றட்ட கல்விக் கல்லூரிகளுக்கு அனுமதி பெற,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அப்பரீட்சையைக் கொழும்பில் மட்டும் நடாத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்து, அனுமதியட்டைகளை அனுப்பியிருந்து.
- யாழ்ப்பாணத்திலிருந்தும் விண்ணப்பதாரிகள் கொழும்புக்கே வரவேண்டும்.
- எவ்வளவு சிரமம், செலவு.
- ஏறத்தாள ஆயிரத்து ஐந்நூறு விண்ணப்பதாரிகள்.
- செயலாளரிடம் சென்றேன்.
- விளக்கினேன்.
- அனுதாபத்துடன் கேட்டு ஆவன செய்வதாகவும் அமைச்சரின் காதிலும் போடும் படியும் கூறினார்.
- சென்றேன். அமைச்சரில்லை.
- மனு ஒன்று தயாரித்துக் கொடுத்தேன்.
- செயலாளரிடம் பிரதி வழங்கினேன்.
- யாழ்ப்பாணத்தில் பரீட்சை நடந்தது.
- இது போன்ற பல செய்து கொள்ள முடிந்தது.



## கேள்வி கோரப்பட்டது

- Phase II கட்டட வேலைகளுக்கான கேள்வி கோரப்பட்டது.
- Daily News பத்திரிகையில் வெளியிடப்பட்டது.
- எங்கள் இக் கட்டட வேலைத்தரத்துக்கு விண்ணப்பிக்கக் கூடிய ஒப்பந்தக்காரர் யாரும் யாழ்ப்பாணத்திலில்லை.
- தென் பகுதியிலிருந்தே பலர் விண்ணப் பித்தனர்.
- ஒப்பந்தம் கோரல், கேள்விச்சபை கூடித் தீர்மானித்தல், வேலை வழங்கல், நிதி, மேற்பார்வை, தரக்கணிப்பீடு யாவும் TETD Project செயற்பாடுகள்.
- இதை விளங்கிக் கொள்ளமுடியாமல் சிலர் அவலப்பட்டதுண்டு.
- அவர்கள் பாவம்.



## நீதிமன்றில் வழக்கு

- கல்லூரி படிப்படியாக உயிர்ப்புப்பெற எங்களுக்குத் தரப்பட்ட காணியில் இரண்டு பரப்பு தனக்குரியதென வழக்குப் போட்டார்கள்.
- இதுவரை நான் எதற்காகவும் நீதி மன்றம் சென்றதில்லை.
- கல்லூரிக்காகச் செல்லவேண்டியதாயிற்று. ஆயத்தமானேன்.
- நீதிமன்றம் நீங்கள் வரத்தேவையில்லை, நானே பார்த்துக்கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என்றார், எங்கள் பகுதிக் கிராம சேவையாளர் திரு. யோசேப் இரட்ண ராசா.
- எங்களுக்குப் பல வழிகளில் உதவி செய்து வருபவர் அவர்.
- கல்லூரி வளர்ச்சிக்குப் பல வழிகளில் தோள் கொடுத்தவர்.



- கல்லூரி வளவில் இருந்து மண் களவெடுத்தவனைக் கூட கையும்மெய்யுமாகப் பிடித்துத் தந்தவர்.
- எங்கும் எந்த நேரத்திலும் எமக்குதவ வந்துவிடுவார்.
- தான் வழக்கை கவனித்துக் கொள்வதாகக் கூறிச் செயற்படலானார்.
- வழக்கு நீதிமன்றில்.
- உரிமையான காணியின் ஆதாரங்களை அடுத்த தவணையில் சமர்ப்பிக்கும்படி மன்றினால் கோரப்பட்டது, வழக்காளியிடம்.
- அடுத்த தவணையில் செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.
- கிராமசேவையாளருக்கு என்றும் எம் நன்றிகள் தொடரும்.

## விளையாட்டு மைதானக் காணி

- கல்லூரிக்கு முன்னால் ஒரு தொகுதிக் காணி விற்பனைக்கு வந்தது.
- அதை வாங்கி அங்கு விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமென்பது, டாக்டர். லயன். வை. தியாகராசாவின் ஆசை.
- அவ்வாறு அமைத்தால் பல நன்மைகள்.
- கல்லூரி வளாகத்தில் உள்ள பல தாவரங்களைக் காப்பாற்றலாம்.
- இல்லையேல் வளாகத்துள்ளேயே விளையாட்டு மைதானம் அமையும்.
- பயன் தரு மரங்கள் பல அழிக்க நேரிடும்.
- விற்பனைக்குத் தயாராகவிருந்த காணி முழுவதையும் கொள்வனவு செய்தால் 400M. Track அமைக்கலாம்.
- விளையாட்டுமைதானம் புறம்பாக விருந்தால் கல்விச் செயற்பாடுகள் தடைப்படா.



- இவ்வாறு பல நன்மைகள்.
- ஆனால் காணி கொள்வனவுக்குப் பணம்?
- யோசனையிலிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INSTITUTIONAL PERSONALITY



- இதையறிந்த ஆர்வமுள்ள மாணவர் சிலர்.....
- அன்ரன், தயேந்திரன், செந்தில், பரமசிவம் சுதன் இன்னும் பலர்,
- எம்மை அணுகினர்.
- அக்காணியை எவ்வாறேனும் கல்லூரிக்காக கொள்வனவு செய்ய வேண்டும் என்றனர்.
- சங்கடத்தைக் கூறினேன்.
- அரசாங்கமும் தராது, உலகவங்கியும் தராது.
- என்ன செய்வது? பணம் தேவையே!.
- பணம் சேர்க்கப் பல வழிகள் கூறினர்.
- இறுதியில்,
- அக்காணி கொள்வனவுக்காக கல்லூரி நிர்வாகத்துக்குப் புறம்பாக குழு அமைப்பது.
- அக்குழு மூலம் பாதாளக்கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓடும் சாகசக் காட்சி ஒழுங்கு செய்து நிதி சேகரிப்பது. முடிவாயிற்று.
- அக்காணியின் உரிமையைக் கல்லூரிக்குப் பெற்றுத் தந்தால் சுற்றுமதில் அமைப்பதும் விளையாட்டரங்கை உலகவங்கி மூலம் அதில் கட்டிக் கொள்வதும் எனது பொறுப்பென்றேன்.
- ஏனெனில் Master Plan ல் விளையாட்டரங்கு கல்லூரி வளாகத்துள் கட்ட வேண்டும்.
- எப்பாடுபட்டாவது அதை இடம்மாற்றிக் கொள்ளச் செய்தல் வேண்டும்.
- செய்விக்கலாம் என்ற நம்பிக்கையிருந்தது.
- நம்பிக்கை தானே மனித வாழ்க்கை.
- அன்ரனும், தயேந்திரனும் கிணற்றுள் ஓடும் விநோதவித்தை மோட்டார் சைக்கிள் ஓட்டக்காரரை ஒழுங்கு செய்யக் கம்பகா சென்றனர். வெற்றி கண்டனர்.
- இரவிரவாக அவர்களுடனேயே தெருவோரங்களிலும் அங்குமிங்குமாகத் தங்கி ஒரு வாரத்தில் அவர்களுடன் வந்து சேர்ந்தனர்.
- நல்ல துடிப்புள்ள கல்லூரியில் பற்றுள்ள இளைஞர்கள் அவர்கள்.
- அவர்களின் சொந்த இடம் வவுனியா.
- எமது கல்லூரிக்கு நிறையவே உதவி செய்வர்.
- கல்லூரி மாணவர் கல்லூரிச் சுற்றுலா செல்வதானால், ஏற்பாடு அவர்களே.
- வவுனியாவிலிருந்து பேருந்துகளை ஏற்பாடு செய்தனுப்புவர்.
- அவர்களது Institutional Personality என்னை மிகவும் கவர்ந்தது.
- அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்
- மோட்டார் சைக்கிள் ஓட்டம் நல்லூர்–கோப்பாய், வல்லிபுரம் ஆகிய இடங்களில் காட்சிகளாகின. நல்ல வரவேற்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோர் ஆதரவு

- அக்குழு ஒரு தொகைப் பணத்தை மூலதனமாக வைத்துக் கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கியது.



- திரு. சண்முகதாஸ், திரு. பரமசிவம், திரு. நல்லைநாதன் ஆகிய எமது பெற்றோர்கள் உற்சாகமாகச் செயற் பட்டனர்.
- குழுவின் முக்கிய உத்தியோகத்தர்கள் அவர்கள்.
- ஏனைய பெற்றோர்களையும் அழைத்து விடயத்தை விளக்கினர்.
- அவர்களால் முடிந்ததை அன்பளிப்பாகத் தரும்படி கேட்டனர்.
- பெற்றோர்கள் பூரண சம்மதம் தெரிவித்ததுடன் தவணை அடிப்படையில் தம்மால் முடிந்த தொகை தருவதாகக் குழுவிடம் கூறினர்.
- அவர்கள் யாரையும் வற்புறுத்தவில்லை.
- வசதியற்றவர்களைத் தவிர்த்துவிட்டனர்.
- பெற்றோர்களதும் நலன் விரும்பிகளதும் ஆர்வத்தைக் கண்டு உற்சாகம் பெற்றேன்.
- காணி உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டோம்.
- நான், லயன் டாக்டர் தியாகராசா. சிவநெறித் தவமகன் ஆறுதிருமுருகன் உரிமையாளர்களிடம் சென்று கதைத்தோம்.
- எங்கள் கஷ்ட காலம்.
- கல்லூரிக்கண்மையில் காணி வாங்கின் அதன் விலையதிகரிக்கும்.
- நல்ல இலாபமடையலாம் என்றெண்ணி,
- பலர் போட்டியிடத் தொடங்கி விட்டனர்.
- எங்களுக்குச் சிக்கலேற்பட்டது.
- எவ்வளவோ கதைத்தோம்.
- பல மாணவர்களுக்குப் பயன்படப் போகின்றது, எவ்வளவு காலஞ் சென்றாலும் கை மாறாது;



- விபரமாக எடுத்துக் கூறினோம்.
- இறுதியில் முன்னர் குறிப்பிட்ட விலையை விட பரப்புக்கு 5000/= அதிகமாகப் பேசி முடித்தோம்.
- என்றாலும் மற்றவர்களுக்கு உரிமையாளர் விற்றிருந்தால், நாங்கள் கொடுத்த விலையை விட இரண்டு மடங்கு பெற்றிருப்பர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வியின் பெறுமான முணர்ந்தவர்கள் அவர்கள்.
- எங்களுக்கே விற்றனர்.
- கையிலிருந்த பணத்தைக் கொண்டு காணியின் ஒரு தொகுதியை 06. 01. 2003 ல் கல்லூரியின் உரிமையாக்கினர்.

## பல்வேறு பணிகள் பல்வேறு பிரச்சினைகள்

- ஆக ஒரு நேரத்தில் கல்லூரி தொடர்பான மூன்று பாரிய வேலைகளும் கற்பித்தல் பணியும் நடை பெற்றன.



1. கட்டடப் பணி
2. கோவில் கட்டும் பணி.
3. விளையாட்டு மைதானக் கொள்வனவு.

- எமது இந்த வளர்ச்சியும் வேகமும் சிலருக்குப் பிடிக்க வில்லை.
- பிரச்சினைகள் தந்தனர்.
- மொட்டைக் கடுதாசிகள், பெட்டிசன்கள், தொலைபேசி மிரட்டல்கள் தந்தனர். கோழைகள்.
- பெற்றோர் விளையாட்டு மைதானத்துக்கென்று கொடுத்துவிட்ட பணத்தினை உரிய இடத்துக்குச் சேர்க்காத மாணவர்கள்.
- ஆசான்களைக் காப்பாற்றுவோம் என்று கூறித் தம்மைப் பிரபலப்படுத்தி தப்புத்தாளங்கள் போட்ட கனவான்கள்.
- ஆயிரம் பிரச்சினை தந்தார்கள்.
- உடலால் நாளொன்றுக்கு 18 மணிநேரம் வேலை செய்து களைத்த எம்மை உள்ளத்தால் சலிப்படைய வைத்தார்கள்.



- சிறிது மயக்கம் ஏற்பட்டது. ஆனால்,
- உண்மையானவர்கள், உயர்வானவர்கள் தந்த உற்சாகம்,
- எம்மை மீண்டும் அதே வேகத்தில் ஓடவைத்தது.
- உண்மையுணர்த்த ஈஸ்வரர்கள் இருக் கும் போது,
- தொடர்ந்து முன்னர் போல் செயற்பட்டேன்.
- Less Work Less Problem.
  More Work More Problem.
  No Work No Problem.
- யாரோ சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடப் பணிகளில் ICC நிறுவனம்

- TETD Project ஆல் Phase II க்கு கேள்வி கோரப்பட்டு கொழும்பு ICC நிறுவனத்தினர் ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.
- ICC நிறுவனம் தரம் வாய்ந்தது.
- எங்கள் கட்டடத்தைத் தரமாகச் செய்தனர்.
- Phase II வேலை நடைபெறும் போதே Phase III க்குரிய கேள்வியும் கோரப் பட்டது.
- அதையும் ICC நிறுவனமே பெற்றுக் கொண்டது.
- Lan Management நிறுவனம் ஆலோசகர்களாகக் கடமையாற்றியது.



- தெற்கிலிருந்து மேசன், தச்சுத் தொழில் புரிவோர், கூலி வேலை செய்வோர் அழைத்து வரப்பட்டு அசுரவேகத்தில் வேலை நடைபெற்றது.
- TETD Project ன் நேரடிக் கண்காணிப்பு.
- TETD Project ல் பொறியியலாளர் திரு. சுதேந்திரன் எல்லாவற்றுக்கும் பக்கபலமாக நின்றுதவினார்.
- கல்லூரிக்குத் தேவையானவை பல மேலதிகமாகவும் செய்து தரப்பட்டன.
- விஞ்ஞான ஆய்வு கூடங்கள், அவதானிப்பு வகுப்பறை, பிரதான மண்டபத்துக்கான திரை அமைத்தல், மின்னொளி விளக்குகள் அமைத்தல் என்று பல மேலதிக வேலைகள் செய்து தந்தனர்.

## அவதானிப்பு வகுப்பறை (Observation Class Room)

- இவற்றுள் இந்த அவதானிப்பு வகுப்பறை அமைப்பு இலங்கையில் எங்குமில்லை.
- எமது கல்லூரியில் மட்டுமேயுண்டு.
- எனது வெளிநாட்டுப் பயணங்களின் போது கண்ட, தெரிந்து கொண்ட அடிப்படையில் உருவாக்கப்பட்டது.
- வெளிநாட்டிற்குக் கல்விச் சுற்றுலா செல்லக் கூடிய வாய்ப்புகள் எனக்கு 3 தடவைகள் கிடைத்தன.
- கனடாவுக்கு 2 தடவைகளும் லண்டன், நோர்வே, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் சென்றுள்ளேன்.



- அங்கு கல்வித்துறையின் முன்னேற்றம் கண்டு வியந்தேன்.
- கல்வியில் காணப்படும் தலையிடாத்தன்மை அதன் வளர்ச்சிக்குதவும் இரகசியத்தை அறிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கூட ஆசிரிய நியமனம், இடமாற்றம் எதிலும் தலையிடுவதில்லை. அவை தர மேம்பாட்டுச் செயற்பாடுகளே ஆற்றின.
- அங்கு பல புத்தாக்கங்கள் நிகழ்வதைக் கண்டேன்.
- ஆசிரியர் கல்வியில் கண்டவையெல்லாம் எம்மால் பின்பற்ற முடியாது. அவை வளர்ச்சி பெற்ற நாடுகள்.
- அங்கு அறிந்தவற்றை எமக்கேற்ப, எமது சக்திக்கேற்ப மாற்றிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே அறிவு.
- அவ்வாறு உருவானதே இந்த அவதானிப்பு வகுப்பறை.
- எமது பிரதான மண்டபத்தின் வசதி – யாழ்ப்பாணத்தில் இல்லாதது. பெறுமதியானது.
- இவற்றை எவ்வளவு தூரம் எம்மவர்கள் பயன்படுத்துகின்றார்கள்?

## விளையாட்டு மைதானம் உருவாயிற்று

- விளையாட்டு மைதானத்தின் இரண்டாவது தொகுதியும் வாங்கப்பட்டுவிட்டது.
- எல்லாவற்றின் உறுதியும் எமது கைக்குக் கிடைத்தது.
- உலகவங்கியினரிடம் அவற்றைக் காண்பித்து விளையாட்டரங்கையும் சுற்றுமதிலையும் அங்கு அமைப்பதற்கு அனுமதி பெற்றுக்கொண்டேன்.
- மேற்கொண்டு நிலம் வாங்கக் கூடியதாகவிருந்தும், கனவான் தொல்லையால் குழுவினர் நிறுத்திக் கொண்டனர்.
- வேண்டாம் சேர்,
- நல்லது செய்யும் உங்களுக்குத் தொடர்ந்து தொல்லை தருகின்றார்கள்.
- இவ்வளவும் போதும்.
- அளந்ததை மாற்ற முடியாது என்றனர்.
- 400M. Track அமைக்க முடியவில்லை.
- அந்தக் கனவானுக்கு இது சமர்ப்பணம்.
- 200M. Track அமைக்கக் கூடிய விளையாட்டு மைதானம் உருவாயிற்று.



- மட்டப்படுத்தி, கல்முள் அகற்றி பயன்படுத்தத் தொடங்கினோம்.
- முகிழ் நிலை ஆசிரியர் ஓடி ஆடி விளையாடினர்.
- விளையாட்டுப் போட்டிகள் பல நடைபெற்றன.
- மு. வ. அவர்களின் எழுத்தொன்று ஞாபகம் வந்தது.
- மோட்டார் சைக்கிளில் ஒருவன் சென்றுகொண்டிருந்தான்.
- நாய் ஒன்று அவனைத் துரத்திச் சென்றது.
- அதைப் பொருட்படுத்தாமல் அவன் தன்பாட்டிற் சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொஞ்சத் தூரத்தின் பின் நாய் களைத்து நின்று விட்டது.
- அவன் செல்ல வேண்டிய இலக்கினைச் சென்றடைந்து விட்டான்.
- நாய் தனக்குள் நினைத்துக் கொண்டதாம், "நான் கலைத்ததாலே தான் அவன் ஒடுகின்றான்".
- இது எப்படியிருக்கு?



## கட்டட வேலைகள் பூரணமாக்கப்பட்டன

- எமது கட்டட வேலைகள் முடிவுற்று, பகுதி பகுதியாக எம்மிடம் ஒப்படைக்கத் தொடங்கினர்.
- வளாகத்துள் மரங்கள் நாட்டித் தரவேண்டியதும் ஒப்பந்தகாரர் பணியே.
- என்ன மரங்கள் நாட்ட வேண்டும் எழுதித் தாருங்கள் என்றனர்.
- நான் யாழ்ப்பாணத்திலிருந்து தற்போது அழிந்து செல்லும் இலுப்பை, இலந்தை, கொன்றல், பலா போன்ற மரங்களையும் வேம்பு போன்ற மரங்களையும் எழுதிக் கொடுத்தேன்.
- அதன் தாவரவியற் பெயர்களை எழுதித் தாருங்கள் ஆங்கிலத்தில் என்று கேட்டனர்..
- எமது விஞ்ஞான விரிவுரையாளர்களிடம் கேட்டேன்.
- எமக்கும் சரியாகத் தெரியவில்லை, திருநெல்வேலி விவசாயப் பாடசாலை சென்று வாங்கி வருவோம் என்றனர்.
- பெற்று வந்து கொடுத்தார்கள்.
- அவற்றுள் எவற்றையும் அவர்களால் பெறமுடியவில்லை.
- சாதாரண மரங்களே நாட்டப்பெற்றன.
- 2004 மார்கழி மாதத்தில் ஒப்பந்தப்படி கட்டடங்கள் யாவும் கட்டிமுடிக்கப் பெற்றது.
- ஒரு முழுமையான வளாகமாக எங்களிடம் ஒப்படைத்தார்கள்.
- 14. 01. 2005 அன்று கல்லூரி புதிய நிர்வாகக் கட்டட முன்றலில் பொங்கல் நடைபெற்றது.
- திறப்பு விழா செய்யவேண்டும்.
- பெரிய விழாவாகச் செய்யவேண்டுமென்றனர் சிலர்.
- ஒரு நிறுவனத்துக்கு ஒரு தடவைதான் திறப்பு விழா.
- அது 19. 01. 2003 அன்று நடைபெற்றது.



- ஒவ்வொரு கட்டடத்தையும் கட்டிக் கட்டி திறப்பு விழா செய்வதில்லை.
- எல்லா கட்டடங்களையும் பயன்படுத்தத் தொடங்கினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளங்கள் பயன் படுத்தப்படுகின்றனவா?

- விரிவுரையாளர்களுக்கு அமைக்கப்பட்ட விடுதிகள் வெறுமனே.
- இரண்டு விரிவுரையாளர்கள் மட்டும் பயன்படுத்துகின்றனர்.
- ஏனையோர் 4 மணிக்குக் கலலூரியை விட்டுச்சென்று விடுவர். ஓடி விடுவர்.
- கல்வியியற் கல்லூரியின் உன்னத விழுமியம் இன்னும் அவர்களுக்கு வரவில்லை.
- பின்னர் எவ்வாறு கல்வியியலாளர் களாவது.



- முன்பு மாணவர்களுக்கு உதவியாக ஒவ்வொரு விரிவுரையாளர்களை மாதத்தில் ஒரு நாள் கல்லூரியில் தங்கும் படி கேட்டு,
- எல்லோரும் ஒத்துழைக்க,
- ஒருவர் மனித உரிமை வரை சென்றார்.
- மாணவ நலனில் அதிக அக்கறை கொண்டதால் எனக்கு அவ் அனுபவம்.
- யாரையும் வற்புறுத்தவில்லை.
- அவர்களாக உணர்ந்து நடந்தால் அவர்களுக்கே விடிவு.
- கட்டடங்களின் வேலை மற்றும் எடுத்த கருமங்கள் யாவும் முடிவுற்றன.

## இடமாற்றம் பெற்றேன்

- நான் இடமாற்றம் பெற்றுக் கொண்டேன்.
- எனதிடத்துக்கு, என்னிலும் பார்க்க திறமையான ஒருவரை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து விடுவித்துப் பெற்றுக் கொண்டேன்.
- அவர் திரு. எஸ். கே. யோகநாதன்.
- மிகவும் திறமையானவர், நல்லவர், அனுபவசாலி.
- கல்வியியற்கல்லூரிகளின் செயற்பாடு பற்றிய தெளிவு கொண்டவர்.
- கல்லூரியின் ஊரவர்.
- உப பீடாதிபதியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர்.
- அவரிடம் பொறுப்பைக் கொடுத்து நான் விடைபெறவிருந்தேன்.
- பலர் தடுத்தனர்.
- முகிழ் நிலை ஆசிரியர்கள், பெற்றோர் கள், நலன்விரும்பிகள், நண்பர்கள்.
- நான் செல்வதை உறுதி செய்து கொண்டேன்.
- தவிர்க்க முடியா வெளித்தலையீடுகள்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சில மாணவர்களின் நன்றியில்லாச் செயற்பாடுகள்,
- விரிவுரையாளர்கள் சிலரின் அசட்டைகள்,
- உள்ளொன்று வைத்த புறம் ஒன்று பேசும் பண்பு,
- என்னைத் திடமாக்கி விலகிச் செல்லத் தீர்மானிக்க வைத்தன.



- இதை எவ்வாறோ என்மீது அன்பு கொண்டவர்கள், அறிந்து கொண்டனர்.
- ஆலோசனை சபை உறுப்பினர்கள்.
- ஒரு வருடம் எங்களுக்காக இருங்கள் என்றனர்.
- நானோ உடல் நலக் குறைவாலேயே செல்கின்றேன் தடுக்காதீர்கள் என்றேன்.
- பொய் கூறினேன்.
- அவர்களுக்கு அது தெரியும்.
- மீண்டும் மீண்டும் வற்புறுத்தினர்.
- தட்ட முடியவில்லை. அன்புக்கு அடிமையானேன்.
- பணி தொடர்ந்தேன்.
- அவர்களுக்காக.
- அன்பு பெரிதுதானே.
- எங்களுக்கேயுரிய வழமையான செயற்பாடுகள்,
- உற்சாகமாக வழிகாட்டினேன்.



## இந்து மகாநாடு

- அகில இலங்கை இந்து மாமன்றச் செயலாளர் நாயகம்,
- திரு. கந்தையா நீலகண்டன், சிவ நெறித்தவ மகன் ஆறு திருமுருகனுடன் 08. 05. 2005 அன்று கல்லூரி வந்தார்.
- பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுச் சொற்பொழிவு நடைபெற்றுக் கொண்டிருந்தது.
- பொறுமையாகக் காத்திருந்தார்.
- என்னுடன் கதைக்க வேண்டுமென்றார்.
- கதைத்தோம்.
- அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன்விழா இவ் ஆண்டு 2005இல்,
- யாழ்ப்பாணத்தில் ஒரு மாநாடு நடத்த வேண்டும்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கும் கல்வியியல் செயலமர்வு சார்ந்ததாகவே மகாநாடு அமையும்,
- நீங்களும் உங்கள் விரிவுரையாளர்களும் மாணவர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.
- மகாநாடு உங்கள் கல்லூரியில் நடக்க வேண்டும் இதுவே பொருத்தமான இடம்.
- "இலங்கையில் இந்து மதம்" என்பதே செயலமர்வின் தலைப்பு.
- யாழ்பல்கலைக்கழகமும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும், யாழ் கல்வியியற் கல்லூரியும் முக்கிய பங்காளர்கள் என்றார்.
- சிந்தித்தேன்.
- ஆசிரிய பயிற்சி தரும் எமக்கு இது நல்ல விடயமாகப்பட்டது.
- இதுவும் பயிற்சியின் அங்கந்தானே.

## சமூக இயைபாக்கம்



- கல்வி நிறுவனங்கள் சமூக நிறுவனங்களுடன் இணையவேண்டும்.
- வெற்றி காணலாம்.
- நாம் கல்லூரியில் பல பாராட்டு விழாக்களை நடத்தியுள்ளோம்.
- கௌரவ பட்டங்களை வழங்கியுள்ளோம்.
- சமூகத் தொடர்பாடல் நடவடிக்கை அவை.
- திரு. ஆறு திருமுருகன் அவர்களைப் பாராட்டி 'சிவநெறித்தவமகன்' பட்டம் வழங்கினோம்.
- அவர் பிறந்ததும் இவன் எனது 'தவமகன்' என்று அவர் தந்தையார் மகிழ்ந்தாராம்.
- அருட்கவி ஐயா சொன்ன செய்தியிது.
- கல்விப் பேராசிரியர் கலாநிதி சபாஜெயராசா அவர்களைப் பாராட்டி 'கல்விப் புலரி' பட்டம் தந்தோம்.
- அவர் எனக்கு மட்டும் ஆசான் அல்லர். எமது கல்லூரி விரிவுரையாளர் அனைவருமே அவரது மாணவர்கள்.



- பெரியதொரு மாணவர் பரம்பரையைக் கொண்டவர் அவர்.
- பெரு மனது படைத்தவர். ஆசியும் பெற்றோம்
- 'கருமத்திருதி' என்ற பட்டம் வழங்கிப் பாராட்டினோம் வைத்தியகலாநிதி லயன் வை. தியாகராசா அவர்களை
- எமது கல்லூரி, செஞ்சிலுவைச்சங்கம், அரிமாக் கழகம் இணைந்து நடாத்திய விழா அது.
- தினக்குரல் டத்திரிகையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை கல்லூரியில் நடாத்தி ஊடகத்துறையினருடனும் தொடர்பைக் கொண்டோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூக நிறுவனங்களுடன் எங்களுக்கு நாட்டம் அதிகம்.
- அதனால் எங்களிடம் உயிர்ப்பு இருந்தது.
- இந்து மகாநாடு நடாத்த ஆயத்தமானேன்.
- கல்லூரியின் செயற்பாடுகளைக் குழப் பாது,
- அரசியல் கலக்காது,
- மாணவர்கள் பயன் பெறக்கூடியதாக, நடாத்துவோம் என்றேன்.
- திரு. நீலகண்டன் சம்மதித்தார்.



- அமைச்சில் அனுமதி பெற்றுக் கொண்டேன்.
- இந்து மகாநாடு 15. 07. 2005, 17. 07. 2005 ஆம் திகதிகளில் கோலாகலமாக நடந்தது.
- இடையில் சில துரதிஷ்ட சம்பவங்கள்.
- அதற்கு கிஞ்சித்தும் நாம் காரணமல்ல.
- ஆனால் எம் தலை சற்று உருண்டது.
- பின்னர் உண்மை தெளிந்தது.
- திரு. நீலகண்டனே முன்னின்று தெளிவாக்கினார்.
- இந்த மகாநாட்டால் எமது ஆலயத்துக்கும் நன்மையே.
- கோவில் மண்டபத்துக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் மாபிள் பதித்து அழகுபடுத்தித் தந்தது.
- கோவில் பூசகருக்கு மாதாமாதம் சம்பளப்பணத்தையும் வழங்குகின்றது.
- மன்றத்தின் சேவைக்கு எமது உளம் நிறைந்த வாழ்த்துக்களும், நன்றிகளும்.



## கல்வியியல் சார் பணிகள்

- கட்டடப்பணிகள் மற்றும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலும்,
- கல்விசார் பணிகளில் கவனங்கொள்ளத் தவறவில்லை.
- விரிவுரையாளர்கள் மாணவர்களுடன் தொடர்பு கொண்டு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்து கொள்வேன்.
- இலங்கையிலுள்ள 17 கல்வியற் கல்லூரிகளிலும் அதிக துறைகளைக் கொண்டது எமது கல்லூரியே.
- மொத்தம் 10 துறைகள்.
- அவற்றுள் 06 தமிழ் மொழி மூலமானவை.
- 04 ஆங்கில மொழி மூலமானவை.
- மிக அவசியமான துறைகள்.
- பிரதேசத்தின் தேவையைக் கருதியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவற்றுள் விசேட கல்வித் துறை,
- அமரர் செல்வி. சின்னத்தம்பி அம்மா வின் வேண்டுகோள்.
- பீடாதிபதிகள் கூட்டத்தில்,
- தமிழ் மொழி மூலம் அக்கல்வித் துறை ஆரம்பிக்கப்படவேண்டுமெனக் கேட்டேன்.
- கல்விக் கல்லூரிகள் சபை அனுமதித்தது.



- எக் கல்லூரியில் ஆரம்பிப்பது?
- எவரும் சம்மதிக்கவில்லை.
- நானே ஏற்றுக் கொண்டேன்.
- கைதடி நவீல்ப் பாடசாலை ஆசிரியர்கள் உதவி பெறலாம்.

## அன்புத் தாயும் விசேட கல்வித்துறையும்

- செல்வி. சின்னத்தம்பி அம்மா ஆலோசனையும் பெறலாம்
- விசேட கல்வித்துறையில் அவருக்கு ஈடுபாடு அதிகம்.
- கல்லூரி ஆரம்பித்துச் சிறிது காலத்தில் கல்லூரிக்கு வந்தார்.
- என்னை வாழ்த்தினார்.
- அவர் மீது எனக்கு மட்டற்ற மரியாதை.
- பார்வைக் குறைபாடுடைய மாணவர்க்கு அவர் கல்விபுகட்டும் கனிவு என்னைக் கவர்ந்தது.
- நான் யாழ் இந்துவில் ஆசிரியராகவிருந்த காலத்தில் அங்கு வருவார்.
- பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகள் அங்கு கல்வி கற்றார்கள்.
- அவரது அன்பு, மாணவர்களுடன் பழகும் பாங்கு, சக ஆசிரியர்களுடன் உறவாடும் தன்மை,
- அன்னை திரேசாவை நான் கண்ட தில்லை.
- செல்வி சின்னத்தம்பி அம்மா வடிவிலே கண்டேன்.
- மருதனார் மடத்தில் " வாழ்வகம்" அமைத்துப் பார்வையற்ற குழந்தை களுக்குச் செய்த சேவை..



- அவர் மனித குலத்தின் மாணிக்கம்.
- கைகூப்பி வணங்கத் தகுதியுடையவர்.
- அவரது ஆசைக்காகவும், வேண்டுகோளுக்காகவும் விசேட கல்வித் துறையை ஆரம்பிக்கச் சம்மதித்தேன்.
- திரு. இரவீந்திரன் செல்வி.செல்வநாயகம். எனது மாணவர்கள்.
- இத்துறையைப் பொறுப்பேற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவர்களை இத்துறையின் தேவை தொடர்பான ஆய்வு மேற்கொள்ளும்படி பணித்தேன்.
- ஆய்வறிக்கை அதிர்ச்சியைத் தந்தது.
- விசேட கல்வி தேவைப்படுவோர் தொகை தேவைப்படும் பகுதிகள் கண்டு கொண்டோம்.
- எமக்கு அனுசரணையாக சிவ நெறித்தவமகன், கண்வைத்திய நிபுணர் குகதாசன் ஆகியோரால் ஆரம்பிக் கப்பட்ட சிவபூமிப் பாடசாலையும் அமைத்து கொண்டது.
- இவற்றையெல்லாம் கல்லூரி பயன் படுத்த வேண்டும்.



## தீராத கவலை

- கல்லூரியில் அழகியல் துறைகளில் நாடகத்துறையை விரும்பி இணைத்துக் கொண்டேன்.
- என் மதிப்புக்குரிய குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் கேட்டார்கள்.
- அவர் மீது எனக்கு மதிப்புக் கலந்த பிரியம்.
- இத்துறையைப் பொறுத்தவரை........
- கல்லூரியில் நாடகத்துறை ஆரம்பித்தற்கு முன்பு தரமான நாடகங்கள் பல மேடையேற்றியுள்ளோம்.
- நாடகப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளோம்.
- கொழும்புத் தமிழ்ச் சங்கம், திருக்கோணமலை, வவுனியா, ரூபவாகினி, யாழ்ப்பாணம் ஆகியவற்றில் மேடையேற்றியுள்ளோம்.
- ஆனால் நாடகத் துறை ஆரம்பித்த பின்னர்?
- தீராத வேதனை அங்குதான்.

## கல்வியில் தூரநோக்கு

- எங்கள் கல்லூரியில் துறைகள் அதிகரித்து விட்டன.
- சிலவற்றை நிறுத்த வேண்டும் என்று தொந்தரவு, அமைச்சில் தரத் தொடங்கினர்.
- சமாளிக்க முடியவில்லை.
- ஆரம்பக்கல்வியில் கைவைத்தார்கள்.



- எமக்கு அதன் தேவை மிகப் பெரியது. விடமுடியாது.
- எனவே நானே தீர்மானித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- தமிழ் மொழிமூலம் நடைபெற்ற, கணிதம், விஞ்ஞானம் பாடத்துறைகளை விட்டுக் கொடுத்தேன்.
- அன்றைய நிலையில் அது சமயோசித மானது.
- கணித, விஞ்ஞானத்துறையினரிடை சிறு சலசலப்பு கல்லூரியில்.
- தம்மை வெளியேற்றத்தான் இது.
- ஆதங்கப்பட்டனர்... சந்தேகப்பட்டனர். ஏன்?
- குற்றவுணர்வா?
- நான் காரியங்களை ஆற்றும் போது... அது சம்பந்த மாகச் சிந்திப்பேன்.
- எனக்குள் ஒரு படம் இருக்கும்.
- தூரநோக்கு இருக்கும்.
- திட்டமிட்டுக் கொள்வேன்.
- வெற்றி காண்பேன்.
- கணித, விஞ்ஞானத்துறைகளை விட்டுக் கொடுக்கும் போதும் அவ்வாறே.
- மேற்படி பாடங்களைக் கற்பிப்பதற்கு எம்மிடை பட்டதாரிகளிருந்தனர்.
- அவர்களை உரிய இடங்களில் வேலைக்கமர்த்தாது இருந்திருக்கலாம்.
- எமது கல்லூரியில் அத்துறைகளை விட்டுக் கொடுத்தாலும் வவுனியா, மட்டக்களப்புக் கல்லூரிகளில் புதிதாக ஆரம்பிக்க அனுமதி கிடைத்தது.
- மற்றும் எமது கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் அத்துறைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பிருந்தது.
- தெற்கில் பல பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலக் கல்வி ஆரம்பிக்கப்பட்டு விட்டது.
- வடக்குக்கிழக்கில் அது ஆரம்ப நிலையில்.
- ஆசிரியர்கள் தேவைப்பட்டனர்.




- கல்வி செயலாளர் திரு. தியாகலிங்கம் உற்சாகப் படுத்தினார்.
- ஆங்கிலக் கல்விப் போதனை தேவையா என்று வினா எழுப்பினர் சிலர்.
- தப்பபிப்பிராயங் கொண்டனர்.
- தாய் மொழிக்கல்வி தான் அவசியம்.
- சந்தேகமில்லை.
- உலக கல்விச் செல்நெறியுடன் எம்மை இணைக்க.
- ஆங்கில அறிவு அவசியம்.
- இதில் இரண்டு கருத்துக்கிடமில்லை.
- ஆங்கில மொழி மூலம் கணித, விஞ்ஞானத் துறைகளைப் பெற்றுக் கொண்டேன்.
- ஆங்கிலத்துறை விரிவுரையாளர் பற்றாக் குறையை நீக்க VSO அமைப்புடன் தொடர்பு கொண்டு ஒரு விரிவுரையாளரைப் பெற்றுக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவர் பெயர் திருமதி பற்றீசியா கிறீன் வீல்ட்.
- ஸ்கொட்லன்ட் நாட்டை சேர்ந்தவர்.
- ஆங்கிலத்தில் சில புதிய போக்கினை அவரிடம் அறிய முயற்சித்தோம்.
- முகிழ் நிலை ஆசிரியர்களுக்கு புதிய அனுபவம் கிடைக்கும் அல்லவா?



- USA ல் வாழும் எனது உறவினர் மூலம் நான் முயற்சித்து பெற்றுக் கொண்டவரே அவர்.
- அவரது ஒப்பந்த காலம் முடிவுற்று விட்டது.
- ஏனைய சில கல்லூரிகளுக்கு அரசே இவர்கள் சேவையை பெற்றுக் கொடுத்துள்ளது.
- எதையும் அரசு எங்களுக்காகத் தானாகத் தந்துவிடாது. செய்தும் தராது.
- கடுமையாக உழைக்க வேண்டும்.
- விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.
- முறையீடுகள் செய்ய வேண்டும்.
- பல தடவை உரியவர்களைக் காத்திருந்து உறவாட வேண்டும்.
- மேன் முறையீடுகள் செய்ய வேண்டும்.
- மனம் சோராது தொடர்ந்து தொழிற்பட வேண்டும்.
- எனது அனுபவத்தில் கண்ட உண்மையிது.
- இவ்வாறு பாடுபட்டுப் பெற்றதே அத்துறைகள்.
- பெற்ற தூரநோக்கைப் புரிந்து கொள்ள வேண்டும்.
- வெற்றி பெற உதவி செய்ய வேண்டும்.



- சமுதாய நலனுக்கு அது உகந்தது.
- சந்தேகங்கொள்ளல், புறங்கூறல், ஏமாற்றுதல், எங்களை விட்டு தூரவிலக வேண்டும்.
- அன்றே விடியல் எமக்கு.
- திருக்குறளைக் கற்க வேண்டும். கசடறக்கற்க வேண்டும்.

## பாடசாலைகளுடன் ஒரு வலைப்பின்னல்

- கல்லூரி சமூக நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணியது போல பாடசாலை களுடனும் பல தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது.
- கல்வியியற் கல்லூரிகள் தனித்துக் கற்பித்தல் பயிற்சிக்கும் உள்ளகப் பயிற்சிக்கும், முகிழ் நிலை ஆசிரியர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதால் மட்டும் தொடர்புகளை உரமாக்கமுடியாது.
- பாடசாலை மாணவர்கள் வெவ்வேறு நிகழ்வுகளுக்காக கல்லூரியுள் வந்து செல்லக்கூடிய வகையில் நிகழ்ச்சிகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்விக் கல்லூரி வழங்குகின்ற நினைவு களை மாணவர்கள் வைத்திருத்தல் வேண்டும்.
- அவை சான்றிதழ்களாக, பரிசுப் பொருட் களாக எவ்வடிவத்திலும் இருக்கலாம்.
- நான் வழிகாட்டினேன்.
- எமது விரிவுரையாளர்கள் அதனை ஊக்குவித்தனர்.



## அழகெழல்

- "அழகெழல்" என்ற செயற்றிட்டம்.
- அழகியல் பாடங்களை உள்ளடக்கி யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்ககளை இணைத்துக் கல்லூரியுள் வர வழைத்தது.
- வருடாவருடம் ஒவ்வொருதுறையிலும் போட்டிகள் நடாத்திப் பரிசளிக்கப்பட்டது.
- அதன் வளர்ச்சி நிலையில் வன்னிப் பாடசாலைகளையும் இணைத்துக் கொண்டது.
- சித்திர விரிவுரையாளர் திரு.கே. இரட்னேஸ்வரன் சிறப்பாக இத்திட்டத்தினை முன்னேடுத்தார். அவரது செயற்பாட்டுக்கு எனது வாழ்த்துக்கள்.
- அவர் மேலும் ஊக்கமாகத் தொழிற்பட வேண்டும்.

## பியாஜே

- பியாஜேயின் எண்ணக் கரு விருத்திக் கருதுகோளினை பாடசாலை மட்டத்தில் ஆரம்ப கல்வி மாணவரிடம் பரிசோதனை செய்து அறிக்கைப்படுத்தினர்; முகிழ் நிலை ஆசிரியர்களும் உபபீடாதிபதி திரு. பா. தனபாலன் அவர்களும்.
- பரிசோதனையின் பின் முகிழ்நிலை ஆசிரியர்களின் முடிவு. நாம் இதுவரை கற்பித்தலில் தவறியுள்ளோம். கற்பித்தலில் மாற்றம் அவசியம்.
- தனியாள் வேறுபாடு, மாணவர் மையம் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
- இச் செயற்றிட்டம் வெற்றியைத் தந்தது.
- இது தொடரவேண்டும்.

## தொடருறு கல்வி

- தொடருறு கல்வி வேலைத்திட்டத்துக்குக் உபபீடாதிபதிகள் கவனம் செலுத்தினர்.
- திரு ஜே. சந்திரபிரகாசம் ஆரம்பத்தில் கடமையாற்றினார்.
- அவர் உயர்கல்விற்காக இடமாற்றம் பெற்றுக் கொள்ள திரு. A. பாஸ்கரன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இவர்களால் பல கருத்தரங்குகளும் செயலமர்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டன.
- வலய ரீதியாக ஆசிரியர்களுக்குத் தகவல் தொழில் நுட்பம், ஆரம்பக்கல்வி, செயல்நிலை ஆய்வு ஆகிய துறைகளில் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன.
- இச் செயலமர்வுகளில் சில வதிவிட வசதியுடனும் ஏற்பாடு செய்யப்பட்டன.
- கல்லூரியின் வளங்கள் விரயமின்றி கல்விச் சமூகத்தையும் சென்றடைந்தன.



## தர உள்ளீடு (QUALITY INPUTS)

- கற்பித்தலில் தர உள்ளீடுகளின் ஆக்கத்திறன் விருத்திக்காக ஆரம்பக் கல்வி மட்டத்தில் யாழ் மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கிடையே ஊக்குவிப்புப் போட்டியினை வருடா வருடம் ஒழுங்கு செய்து நடைமுறைப் படுத்தினார் ஆரம்பக்கல்வி விரிவுரையாளர் திரு. ரி. சிவகுமார் அவர்கள்.

## சங்கமம்

- பாடசாலைகளைப் புரிந்து கொள்ளல் செயற்றிட்டத்தின் மூலம் யாழ் மாவட்டப் பாடசாலைகள் பலவற்றின் வரலாறுகளைப் பதிவுக்குக் கொண்டு வந்தோம்.
- இதனைச் செவ்வையாக ஒழுங்கமைப்பவர் உப பீடாதிபதி திரு. பா. தனபாலன். அவரும் எம்மிடம் கல்வி கற்ற திரு. த. சரத்பாபு ஆசிரியரும் இணைந்து 'சங்கமம்' என்ற பாடசாலைகள் வரலாற்று நூலை வெளிக் கொணர்ந்தனர்.
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டச் சில பாடசாலைகளின் வரலாறு அங்கு காவிய வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.
- இதுவரை வேறு எவருமே சிந்திக்காத முயற்சியது.
- அவர்கள் இருவரையும் மனதார வாழ்த்துகின்றேன்.
- நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளின் வரலாற்றை முதற்கட்டமாக அங்கு தந்துள்ளார்கள்
- இவ்வாறான எத்தனையோ செயற்பாடுகள்
- பாடசாலைகளுடன் வலைப் பின்னல் அமைப்புத் தொடர்பினை கல்லூரி கொண்டிருக்கக் கூடியதாக வழிசமைத்துக் கொண்டேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் பாரம்பரியப் பாதுகாப்பு




- தமிழ் பாரம்பரியப் பொருட்களும் செயல்களும் விரைவாக அழிவதை யிட்டு கவலை கொண்டோம்.
- அவற்றில் சிலவற்றையாவுதல், பாது காக்க வேண்டும்.
- சிலபொருட்களைத் தேடிப் பெற்றுக் கொண்டடோம்.
- தக்ஷன், கஜந்தப்பா, கோகுலன், நேசன், ஜெயகரன் போன்ற முகிழ்நிலை ஆசிரியர்களும் இன்னும் பலரும் பக்க பலமாக நின்றனர்.
- எம் முன்னோர் பாவித்த மூக்குப் பேணியிலிருந்து திருக்கல் வண்டில் வரை சிலவற்றைத் தேடிப் பெற்றுக் காட்சிப்படுத்தினோம்.
- ஏர், கலப்பை, நீரிறைக்கும் பட்டை, சருவச்சட்டி பட்டைக்கல், அம்மி, திரிகை, ஆட்டுக்கல் சேர்க்கப்பட்டவற்றுள் சில.
- இவற்றுள் சில எனதுரிமையானவை. அன்பளித்தேன்.
- அலுவலக வாயிலில் அம்புவில், மீன் – மூவேந்தர்கள் இருவர் சின்னம் அமைத்தோம்.
- வரவேற்பு மங்கை ஒருவர் வருவோரைக் கைகூப்பி வரவேற்ற வண்ணம் உள்ளார்.

## திறமையைப் போற்றுவோம்

- திரு. ரி. சிவகுமார் பொறுப்பிலுள்ள 'கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு மையம்' பாரம்பரிய பொருட்களையும், திரு. சிவகுமார் அவர்களால் உருவாக்கப்பட்ட கழிவுப் பொருட்களிலிருந்து தர உள்ளீடுகள் ஆகியவற்றையும் கொண்டு தரமான காப்பகமாகத் திகழ்கின்றது.
- திரு. ரி. சிவகுமார் வயதில் சிறியவர்,
- தர உள்ளிடுகளைக் கழிவுப் பொருட்கள் மூலம் உருவாக்கிக் கொள்வதில் வல்லவர்.
- ஆக்கத்திறன் அறிவு மிக்கவர். இத்துறையில் நூல்களும் ஆக்கியுள்ளார்.
- ஆரம்பக்கல்விப் பாடநெறிக்கும் விசேடகல்விப் பாடநெறிக்கும் இவரது ஆக்கங்கள் உச்சப் பயனுடையவை.
- அவரது திறமையையும் பயன் பாட்டையும் அளவிட்டே, அவரை உள்வாங்கினேன்.
- கல்விப் பணிப்பாளர் திரு. விக்கினேஸ்வரன் அவர் திறமையை நற்கறிவர்.
- கல்வியற் கல்லூரியில் அவர் பயன் தரவல்லவர்,
- அதனூடாக எமது பாடசாலைகள் பலவற்றுக்கும் பயன்கிடைக்கும்,
- என்ற தூரநோக்கோடு எமக்கு விடுவித்துதவினார்.
- பயன்படுத்தினோம். பயன்படுகின்றார்.
- "அவன் சின்னப் பெடியன். அனுபவம் குறைவு. அவன் எப்படி கல்விக் கல்லூரியில்" என்று ஒருவகை அதிகாரவர்க்கத்தினர் கரைச்சல் கொடுத்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐயா, அதைத் தீர்மானிக்க வேண்டியவன் நானல்லவா?
- உங்களுக்கேன் அந்தக் கவலை.
- தனியொருவனாக யாழ்ப்பாணம் வந்து பெரிய எவ்வளவோ விடயங்களைச் சாதித்த எனக்கு...
- தெரியாதா திரு. சிவகுமார் பற்றி.
- அவர்களுக்குத் தெளிவாக விளக்கினோம்.
- தெளிந்திருப்பார்கள் என்று நம்புகின்றேன்.
- திரு. சிவகுமார் அவர்களின் செயற்பாடுகளுக்கு எனது வாழ்த்துக்கள்.
- திறமை எங்கிருந்தாலும் வாழ்த்த வேண்டும்.
- ஊக்குவிக்க வேண்டும்.
- திருந்துமா எம்மவர் மனங்கள்!

## பாரம்பரிய நடத்தைகள்

- எமது பாரம்பரியச் செயல்கள் பல, நாகரிகம் கருதிக் கைவிடப்பட்டுவிட்டன.
- அவற்றையும் எம்மால் முடிந்தவரை கல்லூரியுள் சீர் செய்ய முனைந்தோம்.
- பெரியோரை மதித்தல், ஒழுங்கு, கட்டுப்பாட்டைப் பேணல், நேர முகாமைத்துவம் பேணல், கடமையைச் செய்தல், கடின உழைப்பு.
- பிரார்த்தனைகளின் போது கை கூப்பி மனமொன்றி ஈடுபடல்.
- நான் பல இடங்களிலே அவதானித்திருக்கின்றேன்.
- தேவாரம் பாடப்படும் போது சைவப் பெரியார்கள் கூடக் கை கூப்பவே மாட்டார்கள்.
- பட்டையாக விபூதி, உருத்திராட்சம் மாலை, காவி உடை,
- தேவாரம் பாடப்படும்போது கைகூப்பி இறைவனிடம் மனம் லயிக்காது.
- பல்வேறு கோணங்களில் கை இருக்கும். அல்லது கை கட்டி நிற்பர்.
- என்ன, தேவாரம் பாடும்போது இறுதி அஞ்சலியா செலுத்துகின்றார்கள்.
- நமது முன்னோர் தெளிவாகக் கூறியுள்ளனர்.
- இறைவனைப் பாடும்போது கைகுவித்து, கண்களை மூடி மனதை இறைவன் பாதங்களில் குவித்துப் பிரார்த்தனை செய்யுங்கள் என்று,
- இந்து கிறீஸ்தவ பிரார்த்தனைகளின் போது அதனைப் பின்பற்ற வைத்தோம்.
- ஆசிரியர்கள் அனைவரும் விரும்பிச் செய்தனர்.
- நாம் அவர்களுக்குக் கொடுத்த விளக்கம், வளர்த்த விதம் அவர்களைக் கவர்ந்தது.



## தமிழ் உணர்வு

- தமிழ் உணர்வுள்ள மாணவர்கள் சிலர் வந்தனர்.
- Sir இதுபோல் ஒரு பொழுதாவது நாம் தமிழராக இருக்க வேண்டும் என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என்ன செய்யலாம்?
- விடையும் அவர்களிடமிருந்தே வந்தது.
- வாரத்தில் ஒருநாள் தேசிய உடை அணியப் போகின்றோம்,
- என்ன வேட்டி சால்வையா?
- வேட்டியும் சேட்டும்.
- நல்லது. உங்களுக்கு அது. பெண் பிள்ளைகளுக்கு வெண்மையான சேலை சட்டை.
- வெள்ளிக்கிழமைகளில் அணிவோம்.
- அனைவரும் சம்மதம்.
- செயற்படுத்தப்பட்டது.
- மாற்றம் மகிழ்ச்சியையும் தந்தது.
- நான், திரு. தனபாலன், புதிய பீடாதிபதி மூவரும்அவர்களுடன் இணைந்து கொண்டோம்.
- வெள்ளிக் கிழமைகளில் முகிழ் நிலை ஆசிரியர் கல்லூரி வளாகத்துள்,
- வெண்புறாக்களாகத் திரிந்தனர்
- ரம்மியமாக விருந்தது
- அது கல்லூரி நடைமுறையில் இணைந்து விட்டது.

## தமிழ்ப்பெரியார் நினைவு

- தமிழ் மொழிக்கும் தமிழ் மண்ணுக்கும் தமிழர் பாரம்பரியத்துக்கும் தமிழர் கல்விக்கும் தொண்டு செய்த ஈழத்துப் பெரியார்களுக்கு கல்லூரியில் அழியா இடம் கொடுத்தோம்.
- தமிழ்மொழியையும், தமிழர் பாரம் பரியத்தையும் நேசித்த பேராசிரியர் சு. வித்தயானந்தன்



- தமிழர் கல்விக்கு உரம் கொடுத்த கிழக்கின் மைந்தர் பேராசிரியர் ப. சந்திரசேகரம்
- தமிழ் தேசியப் பற்றாளர் பேராசிரியர் அ. துரைராசா
- தமிழ் இலக்கியப் பற்றாளர் பேராசிரியர் கு. கைலாயபதி
- எம் கல்லூரியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
- இவர்களுடன் பேரறிஞர் கலாநிதி சொக்கன், முத்தமிழ் கலாநிதி வீரமணி ஐயாவும்.
- எல்லாத் தமிழ்ப் பெரியார்களையும் எம்மால் இப்போ உள்வாங்க முடியவில்லை.
- இனி வருங்காலங்கள் அதற்குப் பதில் கிடைக்கும்?

## பிறகல்லூரி மாணவர்கள் வருகை

- A9 பாதை திறப்பு,
- நாட்டில் அமைதி நிலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பலரை யாழ்ப்பாணப் பக்கம் இழுத்தது.
- பிற கல்வியியற் கல்லூரி மாணவர்கள் விதிவிலக்கல்ல.
- ஆசையுடன் வந்தனர். வரவேற்றோம்.
- வவுனியா, ஸ்ரீபாத, றுகுணு, புலத்திசிபுர கல்வியியற் கல்லூரி மாணவர் வந்தனர்.
- புலத்திசிபுர மாணவர்கள் சிங்களமொழி மூலம் கற்பவர்கள்.




- நான்கு பேருந்துகளில் வந்தனர். வசதி செய்து கொடுத்தோம்
- அப்போ நாம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வாசிகள்.
- வசதி குறைவு.
- பெருமனதுடன் சமாளித்தனர்.
- விடைபெற்றுச் செல்லும் போது அத்தனை முகிழ் நிலை ஆசிரியர்களும் என் காலில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுச் சென்றனர்.
- என்னைப் பெரிதும் நெகிழவைத்த சம்பவம் அது.

## ஒழுக்கமும் ஆசிரியத்துவமும்

- ஆசிரியர்கள் வழிகாட்டிகள்.
- ஆசிரியர்கள் முன்மாதிரியாக வாழ வேண்டியவர்கள்.
- பேச்சுக்காக வல்ல. இவை சம காலத்தில், எமது சமூகத்திற்கு அவசியந் தேவைப் படுபவை. பின்பற்றப் பட வேண்டியவை.
- கல்லூரியில் ஒழுக்கத்துக்கே பிரதான இடம்.
- பலர் வரவேற்றனர், சிலர் அடக்கு முறையென்றனர்.



- தூண்டி விட்டனர். கஷ்டப்படுத்தினர்.
- ***"ஆசிரியத்துவத்தை மதிக்காதவன் இங்கு நுழையாதிருப்பானாக."***
- கல்லூரி வாயிலில் பொறித்துவைத்தோம் இவ் வாசகத்தை.
- நல்லாசிரியர் பரம்பரை உருவாக்கவே பாடுபட்டோம்
- நெற்பயிரினுள் கோரைப் புற்கள் போல, நல்ல மரத்தில் குருவிச்சைபோல,
- சில மன நோயாளிகள் எம்முடன்,
- தடைகள் போட்டனர். சிலுவையில் அறையமுயற்சியும் செய்தனர்.
- பெருமனதுடன் பொறுத்துக் கொண்டோம்.
- தருமத்தின் வாழ்வதனை சூதுகவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும்.
- எமக்குத் தெரியும் நாம் பண்பாளர்கள். எமது வழி நேர்வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்கள் வெளியீடு



- கல்லூரி ஆரம்பித்த காலத்திருந்தே பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
- முகிழ் நிலை ஆசிரியர் ஆக்கங்கள்,
- விரிவுரையாளர் ஆக்கங்கள்,
- பேராசிரியர்கள் ஆக்கங்கள்,
- வெளியிட்டு ஊக்குவித்தோம்.
- கல்லூரி வெளியீடாகவும் சில நுல்கள் வெளி வந்துள்ளன.
- ஐந்து நூல்கள் ஒரு நாளில் வெளியிட்டும் உள்ளோம்.
- இதில் ரகசியம் என்ன வென்றால்,
- இவற்றால் எமக்கு வரவுமில்லை செலவுமில்லை. ஆக்கியோர் செயற்பாடுகளே எல்லாம்
- வெளியிடல், ஊக்குவித்தல் மட்டுமே நாம்.
- முகிழ் நிலை ஆசிரியர்களால் பல இறுவெட்டுக்களும் வெளியிட ஊக்குவித்தோம்.
- இச் செயற்பாடுகள் கல்லூரியின் புகழை உயர்த்தின.
- முகிழ்நிலை ஆசிரியர் உற்சாகத்தைக் கூட்டின.
- உதயன், வலம்புரி நாளிதழ்கள் எமக்கு எல்லா வகையிலும் உதவின.

## நினைவுச் சொற்பொழிவுகள்

- எம் கல்லூரியில் வாழ்கின்ற தமிழ்ப் பெரியார்கள் நினைவாக நினைவுச் சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்தேன்.
- அவை எமது முகிழ் நிலை ஆசிரியர் அறிவு விருத்திக்கு உதவின.
- புதிய அனுபவத்தை அளித்தன.
- கல்லூரிதினம் ஆண்டுதோறும் இதன் மூலமே நினைவு கொள்ளப்பட்டது.
- பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் எமது விரிவுரையாளர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர் சொற்பொழிவாற்ற ஆண்டு தோறும் சந்தர்ப்பமளித்தேன்.
- சகலதரப்பினரும் பாரட்டினர். பங்கு கொண்டனர்.



## சுனாமி வேலைத்திட்டம்

- சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கற்றல், கற்பித்தல் உதவிகளைச் செய்யுமாறு பீடாதிபதிகளுக்கு அறிவிக்கப்பட்டது.
- விரிவுரையாளர் முகிழ் நிலை ஆசிரியர் இணைந்து அவற்றை தயாரித்து வழங்க வேண்டும் என்றும்,
- பாடசாலைகளுக்கு வருகை தந்து விசேட வகுப்புகளை நடத்த முடிந்தால் செயற்படு மாறும் பிரதம ஆணையாளர் சகலருக்கும் அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மற்றவர்களைப் பற்றித் தெரியாது.
- நாங்கள் செயற்படுத்தினோம்.
- குறிப்புகள், உபகரணங்கள் தந்தார்கள். எமக்கு ஒதுக்கப்பட்ட,
- உடுத்துறை, ஆழியவளை பாடசாலைகள் சென்று வகுப்புகள் நடாத்தினோம்.
- திருமதி வேல்நிதி, செல்வி. செல்வநாயகம் எம்முடன் அங்கு வந்தனர்.
- அங்குள்ள மாணவர்களுடன் வாழ்ந்து வந்தோம்.
- திருப்தி தந்தது
- விரிவுரையாயளர் திரு. ரி. தேவதயாளன் இச் செயற்றிட்டத்தின் இணைப்பாளர்.
- செயற்றிட்டம் முடிவடைந்ததும் என்னிடம் வந்தார்.
- நீண்ட மூச்சொன்று விட்டார்.
- வெற்றிகரமாகச் செய்து முடித்ததால் அது என்று எண்ணினேன்.



- ஆனால் அவர் கூறியது "Sir இனிமேல் இப்படியான வேலையை எனக்குத் தராதீர்கள். கல்லூரியில் புல்லு வெட்டச் சொன்னாலும் வெட்டுகிறேன். குறிப்புக்களையும் ஏனைய கற்றல் சாதனங்களையும் உரியவர்களிடம் பெற்று முடிக்க எனக்குப் போதுமென்றாகி விட்டது."
- அதிர்ச்சியாகவிருந்தது எனக்கு.
- நிறையவே கஷ்டப்பட்டு விட்டார்.
- கஷ்ட்டப் படுத்தியுள்ளார்கள்.
- முடிவுற்றதும் கிடைத்த நிம்மதி, திருப்தி பெரிதல்லவா? சமாதானப் படுத்தினேன்.
- சமாதானப்பட்டார்.
- எனக்கு வேதனையாகவிருந்தது..
- கடின உழைடப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் உரித்தானது எமது சமூகம்.
- இன்று கல்லில் நாருரிக்க வேண்டியுள்ளதே?
- ஏன்?
- ஒவ்வொரு காரியங்களிலும் அனுபவப்பட்டேன்.
- விடை கிடைக்கவில்லை.



- அதை எதிர்பார்ப்பதுதான் தவறோ!!!
- கஷ்டப்படாமல் வாழ நினைக்கும் சமூகம்,
- தான் வாழ்ந்தால் போதுமென்று எண்ணும் மனிதன்,
- மக்களின் நன்றியில்லாத போக்கு,
- அன்புக்குரியவர்களே.......
- நாம் எப்படியிருந்தோம்? எப்படியுள்ளோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வியில், பண்பாட்டில்,
- விழுமியச் செயற்பாட்டில். - சற்று நில்லுங்கள்.
- ஒரு நிமிடம் சிந்தியுங்கள்.
- எதிர் கால சந்ததியினருக்காக-
- சிந்திக்கக் கூடாதா?
- எதிர் கால சந்ததிக்குள் உங்கள் வாரிசுகளும் அடங்கலாமல்லவா?
- அப்போ உங்களுக்கும் பொறுப்புண்டல்லவா?
- இதையும் தட்டிக்கழிக்கப் போகின்றீர்களா?
- உங்கள் சிந்தனைக்கே இது.

## இளைப்பாறுகின்றேன்

- **20. 09. 2006 இல் இளைப்பாறுகின்றேன்**
- எனது நிறைவு வேலை நாள் அன்று கல்லூரியில்.
- அது Official.
- உண்மையில் கல்லூரியிலிருந்து வெளியே வரும் நாள் வரை கல்லூரி வேலைகள் செய்து கொண்டேயிருந்தேன்.
- திரு.S.K.யோகநாதன் பீடாதிபதியாகப் பதவியேற்று விட்டார்.
- அவருக்குதவியாக 5.10.2006 வரை வேலை செய்து கொண்டேயிருந்தேன்.



- கோவிலில் வேலை.
- கோவில் மண்டபத்துக்கு கிறில் அமைத்து அழகுபடுத்திக் கொண்டேன்.
- கல்லூரி இந்து மாமன்றத்துக்கு சிறுகச் சிறுக நிதி சேர்த்து வங்கியிலிட்டிருந்தோம்.
- அதைப் பயன்படுத்திக் கொண்டோம்.
- கோவிலுக்கு ஒரு காண்டாமணி தேவை. இந்துமாமன்றத்திடம் பணம் இல்லை.
- Annai Naga Food City உரிமையாளர் சிவதர்ம வள்ளல் திரு. ரி. குழந்தைவேல் அவர்களை நாடினோம்.
- முழுமனதுடன் அன்பளிப்புச் செய்தார்.
- மணிக்கோபுரம் அமைத்துக்கொள்ள வேண்டும். அம்பிகை களஞ்சியம் ரி. குகநேசன் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.
- பூரணப்படுத்தினோம். சிறப்பாக இருந்தது.
- மணி கணீர் கணீர் என ஒலிக்கும்போதெல்லாம் அவர்களை உளமார வாழ்த்திக் கொள்வோம்.
- கல்லூரிக்கான அவர்கள் பணி தெய்வீகமானது.
- நூலகத்தில் வேலை.
- கல்லூரியை அழகுபடுத்தும் வேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்லூரி வாயிலில் உள்ள பெரிய தூண்கள் திரு. இராஜசிங்கம் (ராசன்) அவர்களால் செதுக்கல் சித்திரங்கள் அமைக்கப்பெற்று கலை வடிவம் பெற்றன.
- உயிர்ப்பான கலைஞர் அவர். அவருக்கு எனது வாழ்த்துக்கள்.
- விடுதியிலுள்ள முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு உணவுப் பொருட்கள் தேடும் வேலை.
- இப்படிப்பல.
- கல்லூரியை திரு. யோகநாதனிடம் ஒப்படைத்து விட்டேன்.
- நிர்வாகக் காரியங்களில் தலையிடவில்லை.
- புற வேலைகளைச் செய்த வண்ணமிருந்தேன்.
- மணிவிழா, பிரியா விடை நிகழ்வுகளுக்காக,
- ஏற்பாடுகள் செய்தனர். நாட்டு நிலமை கருதி எதுவும் நடைபெற இடம் தரவில்லை.
- பிறந்த நாளுக்காக கல்லூரி வித்தகவிநாயகர் ஆலயத்தில் முகிழ்நிலை ஆசிரியர்களும், கல்விசாரா ஊழியர்களும் அபிஷேகம் ஆராதனை செய்து கொண்டனர்.
- விரிவுரையாளர்கள் நல்லூர் கந்தசாமி கோவிலில் அபிஷேக ஆராதனை ஆற்றி மகிழ்வித்தனர்.
- மணிவிழா, பிரியாவிடை விழா எதுவும் வேண்டாம்.
- மறுத்தேன். வற்புறுத்தினார்கள்.
- மேற்படி நிகழ்ச்சியின் நினைவாக கல்லூரி விரிவுரையாளர் ஆய்வில் முகிழக் கூடிய நூற்தொகுதியொன்றை வெளியிடுங்கள்.
- பெறுமதியாகவிருக்கும்.
- முகிழ் நிலை ஆசிரியர்க்கும் பயன்படும். என்றேன்.
- ஒரு முகிழ் நிலை ஆசிரியர் வந்தார்.
- என்னுடன் கல்லூரிப் புற வேலைகளுக்கு அலுக்காது உதவுபவர்.
- கேட்டார்.
- sir "இவ்வளவையும் செய்து முடித்துவிட்டுச் செல்லப் போவதையிட்டுக் கவலையில்லையா? நீங்கள் செல்லப் போவதையிட்டு எங்களுக்கே தாங்க முடியாதுள்ளது"
- நான் கூறினேன்.
- "எனது கடமைக் காலத்தில் இங்கே செய்யவேண்டியதைச் செய்யாது செல்பவனாகவிருந்தால் அல்லது கல்லூரி வளங்களைச் சுரண்டியிருந்தால் அல்லது இங்குள்ளவர் யாருக்காவுதல் மனமறிந்து தீங்கு விளைவித்திருந்தால்,
- மனச்சாட்சி குத்தியிருக்கும்
- கவலையாகவிருந்திருக்கும்.
- நான்கு வருட காலத்துள், எனது சக்திக்கு மேலாகவே வேலை செய்து வெற்றி கண்டுள்ளேன்.
- திருப்தியாகவுள்ளது.
- ஒருவனுக்குக் கிடைத்தற்கரிய பாக்கியம்
- அறிவு ஒளிபரப்பும் கல்விக்கூடம் அமைத்தல் அல்லது, அருள் ஒளிபரப்பும் ஆலயம் அமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எனக்கு இரண்டுமே கிடைத்துள்ளது.
- அதிலும் ஆலயங்கள் 2 அமைக்கும் பேறு கிடைத்தது.
- இந்து ஆலயம். கிறீஸ்துவ ஆலயம்.
- இனி என்ன வேண்டும்?
- சந்தோஷமாகவே விடைபெறவுள்ளேன்" என்றேன்.
- நிலத்தைப் பார்த்த வண்ணம் நின்றார். அவர் வேதனை புரிந்தது.
- முதுகில் தட்டிச் சாந்தப்படுத்தினேன். அமைதியாகச் சென்றார்.
- கல்லூரி என் சொத்தல்லவே,
- விட்டுச் செல்லக் கவலைப்படுவதற்கு.
- பொதுச் சொத்து. தமிழ் சமூகத்தின் சொத்து.
- அதைப் பாதுகாக்க வேண்டியதும்,
- பாதுகாத்து மறுசந்ததிக்கு வழங்கவேண்டியதும் ஒவ்வொருவரினதும் கடமை.
- இவை எதுவும் சும்மாயிருக்க எமக்குக் கிடைத்தவையல்ல.
- என்னைப் போன்று எத்தனையோ பேருடைய கடின உழைப்பு இங்குண்டு.
- ஏன்? நீங்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்புச் செய்திருக்கலாம்.
- எனவே இது உங்கள் சொத்து.
- பேணிப்பாதுகாப்பதும் வளர்ப்பதும் உங்கள் பொறுப்பு.
- நீங்கள் இங்கு செய்யப்போகும் நற்காரியங்கள் ஒவ்வொன்றும் எமது சமூகத்தைச் சென்றடையும்.
- கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்கள்,
- புதுமைகளை விதைக்க; அறிவொளி பரப்ப;
- நாங்கள் இழந்ததை திரும்பப் பெற்றுத்தர;
- எமது சமூகத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள
- செய் தொழிலில் ஈடுபாடு காட்ட;
- எதிர்காலத்தில் தோன்றக்கூடிய சவால்களை எதிர்கொள்ள; தயாராகவிருக்கிறார்கள்.
- இள இரத்தம், ஓய்வின்றி உழைக்கும்.
- எங்கள் ஆதங்கங்களைத் தீர்த்து வைக்கும்.
- உதவுவீர்களா?

– நன்றி –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# POOBALASINGHAM BOOK DEPOT

**IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS.**

**Head Office :**
340, 202 Sea Street,
Colombo 11, Sri Lanka.
Tel. : 2422321
Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

**Branches :**
309A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel. : 4-515775, 2504266

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.



# பூபாலசிங்கம் புத்தகசாலை

**புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்**

*தலைமை :*
இல. 340, 202 செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை.
தொ. பே. 2422321
தொ. நகல் 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

*கிளை :*
இல. 309 A–2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை
தொ. பே. 4–515775

இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PRINTED BY UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO - 13. TEL: 2330195, 2478133